வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P . 1632    விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk    மலர் : 03    26.02.2022 சனிக்கிழமை    இதழ் : 83    பக்கங்கள் : 16

# இலங்கைமீது பழிசுமத்தும் நாடுகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன!

## வெளிவிவகார அமைச்சு பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 26

இலங்கை மீது குற்றம் சுமத்தும் பல நாடுகள், கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடு பட்டுள்ளன என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அமைச்சின் செய லாளர் ஜயநாத் கொலம் பகே இதனை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கூட் டத்தொடர் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில், ஏப்ரல் மாதம் முதலாம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து எதிர்வரும் 3ஆம் திகதி விவாதிக்கப் படவுள்ளது.

இந்த நிலையில், ஜெனிவா கூட்டத்தொடர் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், எதனையும் செயற்படுத்த வேண்டும் என எந்தவொரு அரசாங்கமும் 15

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

# சர்வதேசத்தை நாடுவதை தவிர நீதி கிடைக்க வேறு வழியில்லை!

## இலங்கை கத்தோலிக்க சபை

கொழும்பு, பெப்ரவரி 26

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க சர்வதேசத்தின் உதவியை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடந்து ஆயிரம் நாட்களுக்கும் மேலாகிவிட்டது என்று கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தெரிவித்துள்ளது. 15

## கொரோனாவால் 26 பேர் மரணம்

கொழும்பு, பெப். 26

நாட்டில் நேற்று முன்தினம் 26 கொரோனா மரணங் கள் உறுதிப் படுத்தப் பட்டுள்ளன. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அர சாங்க தகவல் திணைக் 15

## இன்று 3 மணிநேர மின்வெட்டு

கொழும்பு, பெப். 26

வார இறுதி நாட்களின் இரவு நேரங்களில் மின் துண்டிப்பை மேற்கொள்ளாமலிருக்க தீர்மானிக் கப்பட்டுள்ளது. 15

## பழைய முறைமையில் மாகாண சபை தேர்தல்

### பாராளுமன்ற தெரிவுக்குழு இணக்கம்

கொழும்பு, பெப். 26

புதிய முறைமை கொண்டுவரப்படும் வரையில் பழைய முறையின் கீழ் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டுமென தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இணக்கம் எட்டப் பட்டுள்ளது.

அனைத்து தேர்தல்களும், தொகுதிவாரி முறைமையின் கீழ் 60 சத வீதமும் மற்றும் விகிதா 15

## ரஞ்சனுக்காக ஜெனிவா பயணிக்கின்றார் ஹரீன்

கொழும்பு, பெப். 26

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ எதிர் வரும் 28 ஆம் 15

## மின் கட்டணம் உயரலாம்?

கொழும்பு, பெப். 26

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை, அரசாங்கத் திடம் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டின் பின்னர் மின் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. 2014ஆம் ஆண்டு மின் கட்டணம் நூற்றுக்கு 25 சதவீதத்தால் குறைக்கப் பட்டாக அவர் 15






# ரஷ்ய தூதரகம் முன்பாக கொழும்பில் போராட்டம்

### உக்ரைன் பிரஜைகள் முன்னெடுத்தனர்

கொழும்பு, பெப். 26

ஐரோப்பாவை கொந்தளிப்பில் ஆழ்த்தியுள்ள ரஷ்யாவில் உக்ரைனின் ஆக்கிரமிப்புக்கு எதிராக கொழும்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப் பட்டது.

கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக் கிழமை இலங்கையில் உள்ள உக்ரைன் சமூகத் தினர் இந்த போராட் டத்தை 15

# பயங்கரவாத சட்டத்தை நீக்க வலியுறுத்தி நீர்கொழும்பிலும் கையெழுத்து வேட்டை

### சிங்கள மக்களும் ஆதரவு வழங்கினர்

கொழும்பு, பெப். 26

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தும் மற்றுமொறு கையெழுத்து போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு பஸ் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக் கப்பட்டது. 15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அமெரிக்கர் ஒருவர் தமிழர் ஒருவருக்கு சொன்னார், “எனக்கு ரென்னிஸ் விளையாட்டில் எல்லா விசயமும் தெரியும், தேவையெனில் நீ என்னிடம் கேட்டுப் படிக்கலாம்” என்று.

அதற்கு அந்தத் தமிழர் கேட்டார், “அப்படியா, சரி சொல்லுங்கள், இந்த ரென்னிஸ் நெற்றில் எத்தனை ஓட்டைகள் இருக்கின்றது?”.

“அடே, நீங்கள் எந்தக் காலத்திலும் ரென்னிஸ் கற்க மாட்டீர்களடா”, என்று கத்தியவாறே அந்த அமெரிக்கர் வெளியேறிவிட்டார்.

கூட்டமைப்பின் பெயரில் அதன் பேச்சாளர் அவ்வப்போது சொல்கின்ற அல்லது செய்கின்ற விடயங்களை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மறுப்பதும், அது தொடர்பாக பின்னர் காட்டமாக கருத்துக்களை சொல்வதும் இப்போது வழக்கமாகி வருகின்றது.

அதுபோலவே தமிழ் அரசு, கட்சி ரீதியாக அல்லாமல், அதற்குள் சிறிதரன் போன்றவர்கள் தமிழ் அரசின் அறிக்கைகள்- கருத்துக்களை கண்டிக்கின்றமையும் இடைக்கிடையே நடந்தேறுகின்றன.

கடந்த இரண்டாயிரத்து இருபது பாராளுமன்ற தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் ஆபிரகாம் சுமந்திரன், விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று பேட்டி கொடுக்கப்போய், அதுவே தேர்தல் காலத்தில் அனைவரின் கவனத்தையும் பெற்றிருந்தது.

அதுமாத்திரமன்றி, கடந்த நல்லாட்சி காலத்தில் அனைத்து முடிவுகளையும் எடுக்கின்ற ஒருவராக- குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற வேளைகளில் அவரைப் பாதுகாக்கின்ற காவலராக ஓடிச் சென்று உதவியதும் கடந்த தேர்தலில் கூட்டமைப்பு படுதோல்வி அடைய காரணமானது. தமிழ் அரசின் தலைவர் மாவை இவ்வாறு, கட்சிக்குள் ஒருவர் தனித்து (சில வேளைகளில் சம்பந்தனுடன் இணைந்து) எடுக்கின்ற முடிவுகளுக்கு எல்லாம் தலையாட்டிக்கொண்டு, தனது பழைய போர்க்குணத்தை மூட்டைகட்டி வைத்துவிட்டு செயற்பட்டதும் அதற்கு மற்றுமொரு காரணமானது. அதனாலேயே அவரது தோல்வி, தேர்தலுக்கு முன்னரே உறுதியாகியிருந்தது.

அதிகம் ஏன், கூட்டமைப்பில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெறும் சிறிதரன்கூட தனது வாக்குவங்கியில் பெருமளவை இழந்துபோக அதுவே காரணமானது.

இந்த தோல்வியிலிருந்து கூட்டமைப்பு மீண்டெழும் என்று எதிர்பார்த்தவர்களில் இந்த ஊர்க்குருவியும் ஒருவர். ஆனால், கூட்டமைப்பு அவ்வாறு தனது தோல்விகளிலிருந்து எந்தப் பாடத்தையும் இதுவரை கற்றுக்கொள்ளவில்லை என்பதையே தொடர்ந்து நடந்துவரும் ஒவ்வொரு சம்பவங்களும் உணர்த்துகின்றன.

அரசாங்கங்களுடன் சேர்ந்து இயங்குகின்ற முஸ்லிம் கட்சிகள் எந்த அரசுடன் இருந்தாலும், தமது இனம்சார்ந்த பிரச்னைகள் என்றால் அதற்கே முக்கியத்துவம் கொடுக்கும். தாம் சேர்ந்தியங்குகின்ற அரசின் விடயங்களா அல்லது இனத்தின் முக்கியத்துவமா என்று வருகின்ற போது, இனத்தின் பிரச்னைக்கே முஸ்லிம் கட்சிகள் முக்கியத்துவம் வழங்கின.

கல்முனை தமிழ் பிரதேச செயலர் விவகாரத்தில் முஸ்லிம் காங்கிரஸின் நெருக்குதலுக்கு ஈடுகொடுக்க கூட்டமைப்பால் முடியாமல் போனது இதற்கு நல்ல சான்று.

கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸின் நெருக்குவாரத்தால் ரணில் அரசுக்கு நெருக்கடி வந்துவிடக் கூடாது என்பதில் கவனம் செலுத்தியதே தவிர, தமிழர் விவகாரத்திற்கு அல்ல. அப்போதெல்லாம் அதனை அமைதியாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் கடந்து சென்றமையும் அவர்களின் தோல்விக்கு காரணமாகின.

இப்போதும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் கூட்டமைப்பின் தமிழ் அரசு தலைமையும் தொடர்ந்து பழைய பாணியிலேயே பயணித்துக் கொண்டிருக்கின்றன.

அதற்கு கடைசி உதாரணம்தான், தமிழக முதல்வருக்கு உலகத் தமிழர் பேரவையுடன் இணைந்து கூட்டமைப்பின் பேச்சாளர் தன்னிச்சையாக கடிதம் எழுதியதும், அதனை ரெலோ கண்டித்திருப்பதும்.

இப்படியே போனால், ஆனந்தசங்கரி ஐயா ஒரு கட்சியை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதுபோல, தமிழ் அரசும் ஒருவர் கையில் இருந்துகொண்டு அரசியல் செய்யும் நிலை வரும்.

இதுவெல்லாம் பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கும் சங்கதியல்ல. இது குறித்து இப்போதே விழித்தெழ வேண்டும்.

- ஊர்க்குருவி

# இலங்கை வந்தார் தி.மு.க பிரமுகர் பல தரப்பினருடன் பேசத் திட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 26

தமிழகத்தின் திராவிட முன்னேற்ற கழகத்தின் முதன்மைச் செய்தித் தொடர்பாளர் கே. எஸ். ராதாகிருஷ்ணன் இலங்கை வந்துள்ளார்.

அவரை அவரது நெடுங்கால நண்பரும் இலங்கைச் சிவசேனைத் தலைவருமான மறவன்புலவு சச்சிதானந்தன் கொழும்பு விமான நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வரவேற்றார்.



இலங்கையில் தமிழரின் அரசியல் எதிர்காலம் - சிறப்பாக சைவ தமிழரின் எதிர்காலம் தொடர்பாக தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு ஒத்துழைப்பு ஆதரவு தொடர்பாக பேச்சு நடத்தவே கே. எஸ். ராதாகிருஷ்ணன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இலங்கை வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் சில நாட்கள் தங்கியிருக்கவுள்ள அவர், இலங்கை சிவசேனை அமைப்பினரை சந்தித்துப் பேசவுள்ளார். அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

மேலும், தமிழகத்தில் நடைபெறவுள்ள 11ஆவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பாக இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைத் தலைவர்களுடனும் அவர் பேச்சு நடத்துவார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# கூட்டமைப்பு நினைத்த நேரத்தில் ஜனாதிபதியை சந்திக்கமுடியாது!

## இராஜாங்க அமைச்சர் செஹான் சொல்கிறார்

கொழும்பு, பெப். 26

“கூட்டமைப்பினர் நினைத்த நேரத்தில் எல்லாம் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றால் ஜனாதிபதியை சந்திக்க முடியாது. ஜனாதிபதியை சந்திக்க செல்வதென்றால் நேரம் ஒதுக்கிக் கொண்டு செல்ல வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பினரை போன்று வேலைவெட்டி இல்லாது செயல்படும் நபர்கள் எமது அரசாங்கத்தில் இல்லை” என்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார்.

மேலும்,

கூட்டமைப்பினர் சபையில் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர், ஜெனிவா கூட்டத்தொடர் வரும்வேளையில் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள். சுமந்திரன் உங்களின் பக்கம்தானே உள்ளார். அவரிடம் ஆலோசனை கேட்க முடியுமே. முன்னைய ஆட்சியாளர்களும் சுமந்திரன் எம்.பியிடம் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டனர்.

ஒவ்வொரு முறையும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெறும் வேளையில் சர்வதேசத்திற்கு கருத்துக்கூற நடவடிக்கை எடுப்பதே உங்களின் செயல்பாடாக மாறியுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கமே ஆட்சி செய்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பினர்தான் அரசாங்கத்தை இயக்கினர். இவர்களை மகிழ்விக்க முன்னைய அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை செய்தது. அப்போது இந்த பிரச்னைகளுக்கு தீர்வுகளை பெற்றிருக்க வேண்டும். ஜனாதிபதியை சந்திக்க செல்வதென்றால் அவரை சந்திக்க நேரம் ஒதுக்கிக்கொண்டு செல்ல வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பினரை போன்று வேலை வெட்டி இல்லாது செயல்படும் நபர்கள் எமது அரசாங்கத்தில் இல்லை.

மக்களுக்காக பணியாற்றும் ஜனாதிபதியே எம்மிடத்தில் உள்ளார். கூட்டமைப்பினர் நினைத்த நேரத்தில் எல்லாம் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றால் ஜனாதிபதியை சந்திக்க முடியாது. ஜனாதிபதியின் செயலாளர் இவர்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பார். ஆனால், இந்த செயல்பாட்டில், பயங்கரவாத குழுக்களை இயக்கிய, அவர்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளும் நபர்களின் தேவையையே இவர்கள் நிறைவேற்றிக்கொண்டுள்ளனர்.

இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் குறித்து துளி அளவேனும் அக்கறை இவர்களுக்கு இல்லை. அதற்கான தேவையும் இவர்களுக்கு இல்லை. ஏனென்றால், பயங்கரவாதிகள் மூலமாக இயங்கும் குழுக்கள் இவர்களை நன்றாக பார்த்துக்கொள்கின்றனர். அதனால்தான் இவர்கள் பேசும் சகல சந்தர்ப்பங்களிலும் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி குழப்புகின்றனர். ஆகவே நாட்டின் ஜனநாயகத்திற்கும், அப்பாவி தமிழ் மக்களுக்காகவும் இவர்கள் ஒரு போதும் பேசப்போவதில்லை - என்றார். (ஐ)

## ‘யாவர்க்கும் நலம்’ கருத்தமர்வு இன்று

யாழ்ப்பாணம், பெப். 26

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு பிரதி சனிக்கிழமைகளில் நடத்தும் ‘யாவர்க்கும் நலம்’ மெய்நிகர் வழி நிகழ்வில் இன்று சனிக்கிழமை ‘பெருந்தொற்றுக் காலத்துக்கு பின்னிரான கண் ஆரோக்கியம்’ எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

இன்று இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெறவுள்ள இந்தக் கருத் தமர்வில் பங்கேற்க விரும்பு வோர் சூம் செயலி மூலம் 899 8528 2023 என்ற அடையாள எண் மூலம் 354485 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஏ-9 வீதியில் ஆணின் சடலம்!

கிளிநொச்சி, பெப். 26

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பளை நகரப் பகுதியில் ஏ-9 வீதியிலிருந்து நேற்று அதிகாலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

பளை நகரப்பகுதிக்கு அருகில் ஏ-9 வீதியில் ஒருவர் மயங்கிய நிலையில் கிடப்பதை பொது மக்கள் அவதானித்துள்ளனர்.

உடனடியாக அவசர நோயாளர் காவு வண்டிக்கு அழைப்பு விடுத்து பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை குறித்த நபர் இறந்து பல மணி நேரமாகிவிட்டதாக கடமையில் உள்ள வைத்தியர் தெரிவித்தார்.

இறந்தவர் பளை முல்லையடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளந்திரையன் என்பவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, சடலம் பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
26.02.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், மாசி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## பக்கத்து பேரசுகளின் ஆசீர்வாதம் இல்லாமல்?

சிறிய நாடுகளின் இறைமை என்பதை எப்போது வேண்டுமானாலும், அதன் அருகிலுள்ள பேரசுகள் தகர்க்க முடியும். எந்த உலக சட்டங்களாலும் அதனை தடுத்து நிறுத்த முடியாது. சிறிய நாடுகளின் பாதுகாப்பும், அமைதியும் - குறித்த நாடுகள், அருகிலுள்ள பேரசுகளுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பதை பொறுத்தே அமையும். உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு இதற்கான நவீன உதாரணமாகும். ரஷ்யாவின் விருப்பங்களை புறம்தள்ளி, உக்ரைன் நேட்டோ கூட்டணியில் இணைந்து கொள்ள முற்பட்டதன் விளைவாகவே ரஷ்யா, உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை முன்னெடுத்திருக்கின்றது. தனது நாட்டை காப்பாற்றுவதற்காக, உக்ரைன் ஜனாதிபதி யுத்த களத்திற்கு சென்றிருக்கின்றார். தாம் தனித்து போரிடுவதாகவும், ஒரு நாடும் தமக்கு ஆதரவாக வரவில்லையென்றும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பை சிலர் இலங்கை மீதான இந்திய படையெடுப்போடு ஒப்பிட்டு எழுதியிருப்பதை காண முடிகின்றது. சில ஒற்றுமைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். அதாவது, அப்போதிருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நிர்வாகம் முன்னெடுத்த வெளிவிவகாரக் கொள்கையின் காரணமாகவே, அப்போதிருந்த இந்திரா காந்தி தலைமையிலான இந்திய நிர்வாகம் அதிருப்தியடைந்தது.

ஜே.ஆர். ஜெயவர்த்தன, இலங்கையின் பாரம்பரியமான அணிசாரா கொள்கையிலிருந்து விலகி, மேற்கு சார்பான. அமெரிக்க சார்பான வெளிவிவகாரக் கொள்கையை கடைப்பிடித்தார். பிராந்திய சக்தியான இந்தியாவை முற்றிலும் புறம்தள்ளி செயற்பட எத்தணித்தார். இதனால் இந்திரா காந்தி அதிருப்தியடைந்தார். இதனைத் தொடர்தே, இலங்கையின் தமிழர் பிரச்சினையில் இந்தியா நேரடியாக தலையீடு செய்தது. ஈழத் தமிழ் ஆயுத அமைப்புக்களுக்கு பயிற்சியளித்து, அவர்களுக்கு ஆயுதங்களையும் நிதியையும் வழங்கியது. ஜெ.ஆர்.ஜெயவர்த்தன அரசிற்கு நெருக்கடிகளை கொடுத்தது. தனக்கு அமெரிக்கா கைகொடுக்குமென்றே ஜே.ஆர் நம்பி யிருந்தார்.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான், ஜே.ஆர். அமெரிக்காவை அணுகினார் ஆனால் அது நடைபெறவில்லை. இந்த அனுபவத்திலிருந்துதான் ஜே.ஆர். இந்தியாவுடன் இணங்கிச் செல்லும் முடிவை எடுத்திருந்தார். ஒரு வேளை ஜே.ஆர், அன்று இணங்கிச் செல்லாது முரண்டு பிடித்திருந்தால், இலங்கைத் தீவு இரண்டு துண்டுகளாக உடைந்திருக்கவும் வாய்ப்புண்டு. அல்லது, இந்திய இராணுவம் இலங்கைத் தீவை முற்றிலுமாக கைபற்றியிருக்கலாம். ஆனால் ஜே.ஆர். நிலைமைகளை விளங்கிக் கொண்டு ஒரு தேர்ந்த இராஜதந்திரியாக நடந்து கொண்டார். இந்தியாவுடன் நட்புக் கொள்வதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் கொண்டிருந்த ஈழத் தமிழர்களோ, பாரதத்துதோடு மோதி, இறுதியில் அரசியல் கையறு நிலைக்குள் தள்ளப்பட்டனர்.

ரஷ்யாவின் படையெடுப்பு, பக்கத்து பேரசுகளை புறத்தள்ளி செயற்பட்டால் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்பதற்கு புதிதாக கிடைத்திருக்கும் ஒரு சான்று. பக்கத்து பேரசுகளை அனுசரித்து செல்லாத போது, பக்கத்து பேரசுகள் சிறிய அயல்நாடுகளை தண்டிக்கும். பேரசுகளின் அனுகுமுறைகளில் நீதி, நியாயம், கருணை எதனையும் எதிர்பார்க்க முடியாது. உலக அரசியல் வரலாறு தொடர்பில் புரிதலுள்ள எவரும் அவ்வாறு சிந்திக்க மாட்டார்கள்.

பக்கத்து பேரரசுகளை புறம்தள்ளி செயற்படுவதன் விளைவை, ஈழத் தமிழர்களும் இன்று நன்கு புரிந்துகொண்டிருக்கின்றனர். இங்கு எங்களுடைய விருப்பு வெறுப்புகள் முக்கியமல்ல. ஏனெனில் பேரசுகள் சிறிய நாடுகளின் மக்களது விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதில்லை. உக்ரைன் மக்களது விருப்பங்களின் அடிப்படையில் ரஷ்யா அதன் முடிவுகளை எடுக்கவில்லை. இந்திய இராணுவத்தை இலங்கையின் நிலைகொள்ளும் முடிவை எடுத்த போதும் - இங்குள்ள எவருடைய விருப்பங்களும் கேட்கப்படவில்லை.

பேரசுகளின் தீர்மானங்கள் அப்படித்தான் அமைந்திருக்கும். பக்கத்து பேரசுகளை அனுசரித்து செல்ல வேண்டியது, சிறிய அயல்நாடுகளின் கடைமையாகும். அந்தக் கடைமையை செய்யாத போது - அதன் பலனையும் அனுபவிக்க வேண்டிவரும் என்பதுதான் பேரசுகளின் பதில். பக்கத்து பேரரசுகளை புறம்தள்ளி செயற்பட்டு, பேரரசின் கோபத்திற்கு ஆளாகினால், எந்தவொரு நாடும் குறித்த சிறிய நாட்டிற்காக சண்டையிட்டு சாகப் போவதில்லை.

# காலிமுக திடல் சத்தியாகிரகத்தை நினைவூட்டிய ஆர்ப்பாட்டம் !

**அலசுவது இராஜதந்திரி**

*1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி இலங்கையில் சிங்களம் மட்டுமே சட்டம் பாராளுமன்றததில் கொண்டுவரப்பட்டமைக்கு எதிராக கொழும்பு காலிமுகத்திடலில் சத்தியாகிரகம் ஒன்று தமிழ் அரசு கட்சி தலைவர் காலஞ்சென்ற எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்றது. அஹிம்சை வழியில் அன்றைய பாராளுமன்ற கட்டடமாக விளங்கிய இன்றைய ஜனாதிபதி செயலகம் முன்பாக காலிமுகத்திடலில் அமர்ந்து தமிழ் அரசு கட்சி தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் ஏராளமான தமிழ் அரசியல்வாதிகள் அந்தச் சத்தியாகிரகத்தில் பங்குபற்றியிருந்தனர்.*

*அஹிம்சை வழியில் அந்த சத்தியாகிரஹம் இடம்பெற்றபோதிலும் அதனை அன்று பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வன்முறையைத் தூண்டிவிட்டு குழப்பி விட்டிருந்தனர்.*

*கொழும்பு துறைமுகத்தில் கடமையாற்றிய சிங்கள தொழிலாளர்களும் அன்றைய தினம் வன்முறையாளர்களாக மாறி சத்தியாகிரகிகளை தாக்கியிருந்தனர். ‘இரும்பு மனிதர்’ என்றழைக்கப்பட்டவரும் தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினராகவும் விளங்கிய ஈ. எம். வி. நாகநாதன், எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் வலதுகரமாக விளங்கியவரும் பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபராகவும் விளங்கிய அ. அமிர்தலிங்கம் ஆகியோர் மூர்க்கமாக தாக்கப்பட்டிருந்தனர்.*

*தலையில் தாக்குதலுக்குள்ளான அ. அமிர்தலிங்கம் தமக்கு ஏற்பட்ட காயத்துக்கு மருந்து கட்டுப்போட்டவராக மறுநாள் பாராளுமன்றம் சென்றபோது பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அமிர்தலிங்கத்தை நோக்கி தலையில் யுத்தக்காயம் போலிருக்கின்றது என வேடிக்கையாக சொன்னாராம். அப்போது அருகே நின்ற அடங்கா தமிழன் என்றழைக்கப்பட்ட சி. சுந்தரலிங்கம் அது சாதாரண காயமல்ல. கௌரவமான ‘விழுப் புண்’ என்று பதிலளித்தாராம்.*

*அப்போது உயர் பொலிஸ் அதிகாரிகளாக பணியாற்றியவரகளுக்கு மேலிடத்திலிருந்து வந்த உத்தரவில் வன்முறையாளர்களை சுடவோ , கைது செய்யவோ கூடாதெனத் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.*

*அன்று பொலிஸாரிடம் வன்முறையாளர்களை தடுக்க வேண்டாம் என்று மேலிடத்திலிருந்து வந்த உத்தரவு பற்றி அப்போது உயர் பொலிஸ் அதிகாரியாக இருந்த ‘ஜங்கிள்’ திஸநாயக்க என்பவர் பின்னாளில் கவலையோடு தெரிவித்திருந்தாராம்.*

*அன்றைய பொலிஸார் இன்றைய பொலிஸார் போல நீளக்காற்சட்டை அணிந்திருக்கவில்லை. கட்டைக்காற்சட்டையே அணிந்திருந்தனர். சப் இன்ஸ்பெக்டர் தரத்துக்கு மேலிருந்த அதிகாரிகளே நீளக்காற் சட்டை அணிந்திருந்தனர்.*

*கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்ற இந்த வன்முறையைத் தொடர்ந்து இடம்பெற்ற அசாதாரண சூழலில் சாதாரண தமிழ் மக்கள் 150 பேர் வரை தென்னிலங்கையில் கொல்லப்பட்டிருந்தனர்.*

*இந்நிலையில், நேற்று முன்தினம் கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள இன்றைய ஜனாதிபதி செயலகமாக இருக்கின்ற அன்றைய பாராளுமன்றகட்டிடம் முன்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய வடக்கு - கிழக்கில் நில அபகரிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் அறுபது வருடங்களுக்கு முன்னர் சிங்களம் மட்டுமே சட்டத்துக்கு எதிராக நடத்தப்பட்ட சத்தியாகிரஹம் இடம்பெற்ற சூழ்நிலையையே மனக்கண்முன் கொண்டுவருவதாக இருந்தது. அத்துடன் அன்று சிங்களம் மட்டுமே என்ற இனவாத அரசியலோடு ஆரம்பமான இனப்பிரச்னை தற்போது வடக்கு-கிழக்கு தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களையும் அபகரிக்கும் அளவுக்கு விரிவடைந்துள்ளதையும் சுட்டிக்காட்டியிருந்தது.*


*வடக்கு - கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரை முல்லைத்தீவின் கொக்கிளாய், நாயாறு பகுதிகள் முதல் கிழக்கே அம்பாறை வரை தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்கள் அமைந்திருந்தன. ஆனால், தற்போது அந்த வாழ்விடங்கள் படிப்படியாக அரசினால் கையகப்படுத்தப்பட்டு தமிழ் மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களே அழிக்கப்பட்டு வருகின்றன.*

*விவசாய அபிவிருத்தியை மையமாக கொண்டதே மகாவலி அபிவிருத்தித் திட்டமாகும். ஆனால் வடக்கு - கிழக்கில் மகாவலி நதி பாய்ந்தோடும் இடங்களிலெல்லாம் புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தி வெளிமாவட்டங்களிலிருந்து பலர் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளனர்.*

*இந்தப் புதிய குடியேற்ற நடவடிக்கைகளுக்கு பௌத்த பிக்குமார்களின் அடாவடித்தனமும் துணைபோவதையே காணமுடிகின்றது.*

*எனவே வடக்கு - கிழக்கில் தமிழர்களது பூர்வீக நிலங்களும் படிப்படியாக பறிபோகின்ற நிலையில் எதிர்கால வடக்கு-கிழக்கு தமிழ் சந்ததியினர் தமது தனித்துவங்களை பேண முடியாத சூழ்நிலைகளே விரைந்து தோற்றம் பெற்று வருகின்றன.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
முயற்சியில் வெற்றி கிடைக்கும். நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நண்பர்களிடம் அளவோடு நெருங்குவது நல்லது. விலை உயர்ந்த பரிசளித்து நட்பை நெகிழச் செய்வீர்கள்.

**இடபம்**
பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். உழைப்பின் மூலம் கூடுதல் நன்மையை காண்பீர்கள். கனவு நனவாகும். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள்.

**மிதுனம்**
வியாபாரத்தில் லாபம் உண்டு. மகிழ்ச்சி கூடும். நண்பருடன் இருந்து வந்த மனஸ்தாபம் நீங்கும். பயணத்தால் நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காது.

**கடகம்**
உங்களது செயல்களால் உறவினர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். மேலதிகாரி உங்களை அழைத்து பேசும்போது அதை சரியாக பயன்படுத்துவீர்கள். புதிய துறையில் ஈடுபடுவீர்கள். மகிழ்ச்சி.

**சிம்மம்**
சகபணியாளர்களின் ஒத்துழைப்பால் உங்களுக்கு நன்மை ஏற்படக்கூடும். சிலரது உண்மை முகம் தெரிய வருவதால் குழப்பம் ஏற்படும். தெய்வீக எண்ணங்கள் மனதில் பெருகும்.

**கன்னி**
தொலைபேசி வழியாக வரும் செய்தி மன அமைதியை மீட்கும். பணியிடத்தில் இருந்த நெருக்கடி அகலும். புதிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள். பணியிடத்தில் இன்று நடக்கும்.

**துலாம்**
உறவினர்களால் ஏற்பட்ட சிரமங்கள் இன்று நீங்கும். பகைவர் மனம் மாறுவர். தாயின் அன்பை பெறுவீர்கள். பிரச்னை ஒன்று தீரும். நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும்.

**விருட்சிகம்**
உறவினர் விஷயத்தில் தலையிட வேண்டாம். ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். வாகன வசதி அதிகரிக்கும். வியாபாரத்தில் வரவு சற்று உயரும்.

**தனுசு**
பயணத்தின்போது பொருட்களை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள். புதிய முதலீடுகள் செய்வதை சில காலத்துக்குத் தவிர்க்கவும். சக பணியாளர்களை அனுசரித்து செல்வது நல்லது.

**மகரம்**
பொருளாதார நெருக்கடி சற்றே அகலும். நட்பு வட்டம் விரியும். புதிய வாய்ப்புகளை பயன்படுத்த தயங்க வேண்டாம். குழந்தைகளால் ஏற்பட்ட சிரமம் அவர்களாலேயே அகலும்.

**கும்பம்**
மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதால் பேச்சில் கம்பீரம் பிறக்கும். சொந்தங்கள் உதவி வேண்டி உங்களைத் தேடி வருவர். கடன் பிரச்னை தீரும். மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்**
குழம்பிய மனநிலை தெளிவாகி உங்களின் செயல்பாடு மேம்படும். வீண் விவாதங்களைத் தவிர்க்கப்பாருங்கள். பரிசு வாங்குவீர்கள். உங்களின் புகழ் அதிகரிக்கும். பெரியோரின் ஆசி கிடைக்கும்.

# ஜெயக்குமார் கைதுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



சென்னை, பெப். 26

அதிமுகவின் அமைப்புச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார் கைது செய்யப்பட்டதை கண்டித்து நாளை மறுதினம் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் அ.தி.மு.க. ஆர்ப்பாட்டத்தை அறிவித்துள்ளது.

திமுக தொண்டரை நிர்வாணப்படுத்தி கும்பல் வன்முறையில் ஈடுபட்டதாக ஜெயக்குமார் மீது குற்றம் சாட்டப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார். சென்னையை அடுத்த பூந்தமல்லியில் கிளைச் சிறையில் வைக்கப்பட்ட வரை பிறகு புழல் சிறைக்கு மாற்றினார்கள்.

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"தி.மு.கவின் கையாலாகாத்தனத்தையும் தி.மு.க. அமைச்சர்களின் அராஜகத்தையும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத திமுக அரசின் செயல்பாடுகளையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் மக்களுக்கு தெளிவாக புரிகின்ற வகையில் செய்தியாளரை சந்தித்து விளக்கமாக தெரிவித் துக்கொண்டிருந்தவர் கழக அமைப்புச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார்.

முதல் தகவல் அறிக்கையில் சொல்லியிருக்கும் எந்த சட்டப் பிரிவுகளின் கீழும் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத அவரை கைது செய்து நீதிமன்ற காவலில் வைத்து இருப்பதை கண்டித்தும் பிணையில் வர முடியாத அளவுக்கு தொடர் வழக்குகளை அவர் மீது புனைய முயற்சிக்கும் திமுக அரசை கண்டித்தும் திங்கட்கிழமை காலை தமிழகம் முழுவதும் வருவாய் மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்."

# ஜெயலலிதா இருந்தவரை தமிழகத்தின் உரிமைகளை விட்டுக்கொடுத்ததில்லை

## சசிகலா தெரிவிப்பு



சென்னை, பெப். 26

50 ஆண்டுகள் வரலாற்றில் இந்த இயக்கம் தொடர் தோல்வியை கண்டதில்லை. இதை மனதில் எண்ணி பார்த்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று சசிகலா தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 74 ஆவது பிறந்தநாள் தினவிழா ராமாபுரம் எம்.ஜி.ஆர்., தோட்டத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சசிகலா எம்.ஜி.ஆர்., மற்றும் ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் அவர் பேசும்போது, ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபொழுது தமிழக உரிமைகளை எந்த விதத்திலும் எங்கும் விட்டுக்கொடுத்ததில்லை. எனக்காக தனியான ஒரு வாழ்க்கையை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கவில்லை.

50 ஆண்டுகள் வரலாற்றில் இந்த இயக்கம் தொடர் தோல்வியை கண்டதில்லை. இதை மனதில் எண்ணி பார்த்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றார். மேலும், விதைத்தவர்கள், வளர்த்தவர்களை மறுத்ததால் தான் இன்று இந்த நிலை, இதை அவர்கள் உணரவேண்டும், நாம் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

# கமல் கட்சி வேட்பாளர் தற்கொலை! 44 வாக்குகளே கிடைத்ததால் விரக்தி

சென்னை, பெப். 26

திருப்பூர் மாநகராட்சி தேர்தலில் 44 வாக்குகள் மட்டுமே கிடைத்ததால் விரக்தியில் இருந்ததாக கூறப்படும் கமல்ஹாஸன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளர் தூக்கிட்டு தற்கொலை செய்தகொண்டது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

திருப்பூர் கல்லூரி சாலை கொங்கணகிரி பகுதியில் வசித்து வருபவர் மணி (55 மக்கள் நீதி மய்யத்தில் உறுப்பினராக இருந்து வருகிறார்.

கடந்த வாரம் நடந்த திருப்பூர் மாநகராட்சி தேர்தலின் மக்கள் நீதி மையம் சார்பில் போட்டியிட்டார். மேலும் தேர்தல் செலவுக்காக அக்கம் பக்கத்தில் 50,000 ரூபா வரை கடன் வாங்கி செலவு செய்துள்ளார். அந்தப் பகுதியில் தனக்கு செல்வாக்கு உள்ளதாகவும், கண்டிப்பாக வெற்றி பெறுவேன் எனவும் அப்பகுதி மக்களிடம் கூறிவந்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த 22ஆம் திகதி வாக்கு எண்ணிக்கையின்போது, மணி வெறும் 44 வாக்குகளை மட்டுமே பெற்றார். இதனால் மிகுந்த மன உளைச்சலில் இருந்து வந்துள்ளார்.

இதனால் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# திருச்சி முகாமிலுள்ள 6 ஈழத் தமிழர்கள் இரண்டாவது நாளாக உண்ணாவிரதம்!

திருச்சி, பெப். 26

திருச்சி முகாம் சிறையில் உள்ள 6 இலங்கைத் தமிழர்கள், தங்களை விடுதலை செய்யக் கோரி இரண்டாவது நாளாகவும் நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்கள் சிறைவைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் கடந்துள்ள நிலையில், எந்தக் குற்றப்பத்திரமும் தாக்கல் செய்யப்படவில்லை எனத் தெரிவித்து நேற்று முன்தினம் அவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடங்கினர்.

இந்த நிலையில், அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்திய தன் பின்னரும், அவர்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்ததாக இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

# யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் மானுடம் 2022 சர்வதேச ஆய்வு மாநாடு!

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் 'மானுடம் 2022' என்னும் பெயரிலான சர்வதேச ஆய்வு மாநாடொன்றை எதிர்வரும் ஜூலை மாதம் நடத்தவுள்ளது.

'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

இது தொடர்பாக, 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாட்டின் அமைப்புக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை அது ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டு கால வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சர்வதேச ஆய்வு மாநாடு 2022 இன் ஒரு துணை மாநாடாகவும், "மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்" என்ற கருப்பொருளிலே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம், "மானுடம் ஆராய்ச்சி மாநாடு -2022" ஐ எதிர்வரும் ஜூலை மாதம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நாடு ஒரு பெருந்தொற்று நோயின் பிடியிலும், நாட்டின் கல்வி உட்பட பல்வேறு துறைகள் பெருந்தொற்று ஏற்படுத்திய நெருக்கடிகளிலும் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு சூழலில், இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் மூன்றாம் நிலைக்கல்வி ஆரம்பிக்கப்பட்டதன் நூறு ஆண்டுகளின் (1921 - 2021) பூர்த்தி இடம்பெற்றிருக்கிறது.

புரட்சிகரமான திறவுகள் மற்றும் நெருக்கடிமிக்க சவால்களை உள்ளடக்கிய இந்த நூற்றாண்டு கால கால வரலாற்றை மீட்டுப் பார்த்து, அதனை விசாரணை செய்யும் செயன்முறைகளின் ஒரு பகுதியாகவும், மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை இந்த வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும் இந்த சர்வதேச ஆய்வு மாநாடு அமையும்.

இந்த மாநாட்டுக்காக பின்வரும் உப கருப்பொருட்களில் ஒன்றின் மீதோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் மீதோ கவனத்தினைக் குவிக்கும் வகையிலான ஆய்வுக் கட்டுரைகள் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் வரவேற்கப்படுகின்றன.

-1921 ஆம் ஆண்டுக்கு முன்னரும் பின்னரும் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளினதும் அவை சார்ந்த ஆய்வுகளினதும் பரப்பு, உள்ளடக்கம் மற்றும் இயல்புகள்.

-இந்தக் கல்விப்புலங்களின் வீச்சுகள் மற்றும் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் இந்தத் துறைகளிலே அவதானிக்கப்படும் தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்.

-சிலோன்/ இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளிலே கற்றல், கற்பித்தல் மற்றும் ஆய்வுச் செயன்முறைகளை வடிவமைக்கும் தத்துவங்கள், கட்டமைப்புகள் மற்றும் சட்டகங்கள்.

-சிலோன்/ இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் போக்குகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் சமூக, அரசியல், பொருளாதார, கலாசாரக் காரணிகள்.

-ஜனநாயகமயமாக்கல், சமுதாய அபிவிருத்தி, சமூக நீதி, பால்நிலைசார் நீதி, கலாசாரச் சகவாழ்வு போன்றவற்றினைப் படைப்பதிலும், ஊக்குவிப்பதிலும் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் வகிபாகம்.

-பன்மைத்துவம், நிலம், இலவசக்கல்வி, இராணுவமய நீக்கம், நினைவேந்தல், மனித உரிமைகள், நீதி, சமத்துவம், சுய நிர்ணயம், சகவாழ்வு போன்ற இலக்குகளினை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய போராட்டங்களை ஆதரிப்பதிலும், வலுப்படுத்துவதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் அதன் சமூகமும் செய்த முயற்சிகள் மற்றும் செயல்பாடுகள்.

-சிலோன்/ இலங்கையில் இனம், மதம், கலாசாரம், பிராந்தியம், வர்க்கம், சாதி, பாலினம், பாலுணர்வு போன்றவற்றின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகின்ற மற்றும் ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்துகின்ற, மேலாதிக்க, பேரினவாத மற்றும் நவதாராளவாத நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகள் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றமை.

-சிலோன்/ இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகளில் அவதானிக்கப்படும் மையங்களும் விளிம்புகளும் அத்துறைகளிலே நோக்கப்படும் ஆதிக்க நீரோட்டங்களும் எதிர்ப்பு நீரோட்டங்களும்.

-மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகளிலே பெருந்தொற்று நோய் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நெருக்கடிகள் மற்றும் இந்தத் துறைகளும், இந்தத் துறைகளுடன் தொடர்புடைய கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வுச் சமூகங்கள் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதிலே வெளிக்காட்டி வரும் புத்தெழுச்சி.

-இன்றைய இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலும் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகளின் இடம், வகிபங்கு, மற்றும் எதிர்காலத்தில் இத்துறைகள் செல்ல வேண்டிய திசைகள்.

முழுமையான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியாக மார்ச் 29 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. மாநாடு ஜூலை மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

# பயங்கரவாத சட்ட திருத்தம் குறித்து மார்ச்சில் பாராளுமன்றில் விவாதம்

## அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, பெப். 26

**பயங்கரவாத தடைச் சட்டத்தில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மார்ச் முதல் வாரத்தில் இது குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

பிரெஞ்சுக் குடியரசின் செனட்டில் இடம்பெற்ற பிரான்ஸ் - இலங்கை நட்புறவுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடனான காலை உணவு சந்திப்பில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு இலங்கையின் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கும் போதே பீரிஸ் இவ்வாறு கூறினார்.

தற்போது ஐரோப்பிய ஒன்றியத்துக்கு பிரான்ஸ் தலைமை தாங்கும் பின்னணியில், இலங்கை மீது செலுத்தப்படுகின்ற நீடித்த அக்கறைக்காக பேராசிரியர் பீரிஸ் பிரான்ஸ் செனட்டர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

சுற்றுலா, வெளிநாட்டுப் பணம் மற்றும் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளில் இருந்து பெற்றுக் கொள்கின்ற அந்நிய செலாவணியில் ஏற்பட்டுள்ள கணிசமான குறைவு குறித்த விசேட குறிப்புடன், நாட்டின் பொருளாதாரத்தில் கொவிட் தொற்று நோயின் பாதகமான தாக்கம் தொடர்பாக இலங்கையின் தற்போதைய சவால்கள் குறித்த விளக்கத்தை அவர் வழங்கினார்.

நாடு தற்போது படிப்படியாக மீண்டு வருவதுடன், பொருளாதார நிறுவனங்களின் நிலையான மறுமலர்ச்சியையும் காண்பதாக அவர் விளக்கினார்.

அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பிரான்ஸ் குடியரசின் செனட்டர்களுக்கு அமைச்சர்



விளக்கினார்.

காணாமல் போனவர்களுக்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி 16 இலக்குகள் பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை போன்ற உள்நாட்டு பொறிமுறைகளின் முன்முயற்சிகள் குறித்து அவர் கருத்து தெரிவித்தார்.

உயர்நீதிமன்றத்தின் தற்போதைய நீதியரசர் ஒருவரின் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை தற்போது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் நீண்டகால நடவடிக்கையை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவொன்று தமது பணியை நிறைவு செய்யவுள்ளதுடன், அவர்களது அறிக்கை முன்கூட்டியே சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட 42 வருடகால பயங்கரவாத தடைச் சட்டத்துக்கான திருத்தங்களுக்கு அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மார்ச் முதல் வாரத்தில் விவாதிக்கப்படவிருப்பதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்காக ஜெனீவா செல்லவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அண்மைக் காலத்தில் இலங்கை மேற்கொண்ட கணிசமான நடவடிக்கைகள் தொடர்பில் பிரான்ஸ் குடியரசின் புரிதலை எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் இடம்பெற்ற கேள்வி பதில் அமர்வின் போது, பொருளாதாரம், துறைமுக நகருக்கு பொருந்தக்கூடிய முதலீட்டு நடைமுறைகள், நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி முறைகள், தொழிலாளர் விவகாரங்கள், பாலின முன்முயற்சிகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை முன்னோக்குகள் தொடர்பான பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் பேராசிரியர் பீரிஸின் விஜயம் மற்றும் தகவல் விளக்கத்திற்காக செனட் சபையின் பிரான்ஸ் - இலங்கைக் குழுவின் தலைவரான செனட்டர் ஜோயல் குரேரியோ நன்றிகளைத் தெரிவித்தார். அடுத்த மாதம் மேற்கொள்ளவுள்ள இலங்கைக்கான விஜயத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அங்கிருந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர். (அ)

# மின்சார கட்டணத்தை செலுத்தாத அமைச்சர்!

கொழும்பு, பெப். 26

இலங்கையில் கோடிக் கணக்கான ரூபா மின்சார கட்டணத்தை செலுத்தாத அமைச்சர் தொடர்பில் தகவல் வெளியாகி இருந்தது.

சுகாதார அமைச்சர் தங்கியிருக்கும் வீட்டின் மின்சார கட்டணமே செலுத்தப்படவில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டுக்கான மின்சார கட்டண நிலவை 12,056,803.38 ரூபா இன்னும் செலுத்தப்படவில்லை என சபை சுட்டிக்காட்டியுள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் அவர் குடியிருக்கும் சரண வீதியில் அமைந்துள்ள வீட்டுக்கே மின்கட்டணம் செலுத்தவில்லை எனவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி அமைச்சரின் வீட்டுக்கு விஜயம் செய்து அவரது மனைவியுடன் கலந்துரையாடியுள்ளனர். அவரிடம் மின்சார சபையின் அறிவிப்பை ஒப்படைத்திருந்தனர்.

கடந்த ஜனவரி 11, 2022 அன்று அமைச்சருக்கு ஒரு கடிதம் அனுப்பியது, ஆனால் கட்டணம் இன்னும் செலுத்தப்படவில்லை. அந்த கடிதத்தில் உடனடியாக நிலுவையை செலுத்துமாறும், மின் இணைப்பை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயருக்கு மாற்றுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ராஜபக்ஷவினரின் கோட்டையில் பிரசாரத்தை ஆரம்பிக்கும் ஜேவிபி!

கொழும்பு, பெப். 26

ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் கோட்டையே அம்பாந்தோட்டை மாவட்டம். அதிலும் தங்காலை என்பது அவர்களின் பூர்வீக ஊர்.

இந்நிலையில் தங்காலையில் இருந்து ஆட்சியைப் பிடிப்பதற்கான முதலாவது பிரசாரக் கூட்டத்தை தேசிய மக்கள் சக்தி ஆரம்பிக்கவுள்ளது.

இன்று அநுரகுமார திஸாநாயக்க உட்பட முக்கிய பிரமுகர்களின் பங்கேற்புடன் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது பிரசாரக் கூட்டம் கடந்த 9 ஆம் திகதி அநுராதபுரத்தில் இடம்பெற்றது.

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவின் பிறப்பு மாவட்டமாக அநுராதபுரமே திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்க இடமளியேன்!

## அமைச்சர் சி.பி.ரத்னாயக்க உறுதி



கொழும்பு, பெப். 26

"வன பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன். வடக்கு மக்களுக்கு அநீதி ஏற்படுவதற்கு இடமளிக்கமாட்டேன்." - என்று வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்னாயக்க தெரிவித்தார்.

மகாவலி மற்றும் வன பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன் தினம் சபைக்குள்ளும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பறிக்காதே, பறிக்காதே தமிழர் நிலங்களை பறிக்காதே எனவும் கோஷம் எழுப்பினர்.

இது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வன பாதுகாப்பு என்ற போர்வையில் தனியாருக்குரிய காணிகளை கையகப்படுத்த எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. அதற்கான பொறுப்பை நான் ஏற்கின்றேன். வடக்கில் இருந்தாலும், தெற்கில் இருந்தாலும் மலையகத்தில் வாழ்ந்தாலும் மக்கள் மக்கள்தான். எனவே, அவர்களின் இடங்களில் கைவைக்கப்படாது. சிலர் இதன்மூலம் சர்வதேசத்துக்கு செய்தி சொல்ல முற்படுகின்றனர். அதற்கும் நான் இடமளிக்கமாட்டேன்.

வனஜீவராசி திணைக்களத்துக்குரிய இடங்கள் அல்லாத மக்களுக்குரிய நிலங்களை பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு கையகப்படுத்த நாம் தயாரில்லை என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன். நான் மன்னார் சென்றிருந்தேன். சார்ள்ஸ் எம்.பியுடன் பேச்சு நடத்தினேன். இணக்கப்பாடும் ஏற்படுத்தப்பட்டது. எனவே, என்ன நடக்கின்றது என்பது உங்களுக்கு தெரியும். வடக்கு மக்களுக்கு அநீதி ஏற்பட இடமளிக்கப்படாது-என்றார். (அ)

# சர்வதேச கவனத்தை ஈர்க்கவே கூட்டமைப்பினர் போராட்டம்!

## இது வெறும் நாடகமென்கிறது அரசு

கொழும்பு, பெப். 26

**"பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது அல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம். அதனால்தான் பிரதமர் சந்திப்புக்கு வாய்ப்பு வழங்கியும் அதனை பயன்படுத்தவில்லை. சர்வதேசத்துக்காகவே கூட்டமைப்பினர் போராட்டம் நடத்துகின்றனர்." – என்று இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

நில அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் சபைக்குள்ளும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதி செயலகத்துக்கு சென்றிருந்ததாகவும், அவர்களை சந்திக்க குறைந்தபட்சம் அதிகாரி ஒருவர்கூட வரவில்லையெனவும் சுட்டிக்காட்டி இருந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி செலயகத்திடம் நான் வினவினேன். ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக விசேட செயலாளர் ஒருவரும், பணியாள் குழுவினருக்கும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்றுள்ளனர்.



அவ்வேளை, ஜனாதிபதியை சந்திக்க வாய்ப்பு கோரியுள்ளனர். இன்றைய தினம் ஜனாதிபதி வேறு வேலைகளில் இருப்பதால், சந்திப்பு முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பிரதமரை உடன் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பு எம்.பிக்களுடன் அலரிமாளிகையில் பேச்சு நடத்துவதற்கு பிரதமரும் சந்திப்புக்கு தயாராகவே இருந்துள்ளார். அதனை இவர்கள் நிராகரித்துள்ளனர். பிரதமரை வீதிக்கு அழைத்துள்ளனர்.

எனவே, கூட்டமைப்பினர் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். சந்திப்புக்கு நேரம் வழங்கியும் அதனை பயன்படுத்தவில்லை. இதன்மூலம் அவர்களின் நோக்கம் என்னவென்பது தெளிவாகின்றது. பிரச்னைக்கு தீர்வைத் தேடுவது அவர்களின் நோக்கம் அல்ல. சர்வதேச கவனத்தை ஈர்க்கவே இப்படியான செயலில் ஈடுபட்டுள்ளனர். ஜனாதிபதி சந்திப்புக்கு நேரம் வழங்குவார். எனவே, அங்கு சென்று பேச்சு நடத்துங்கள்-என்றார். (அ)

# ரஷ்யா, உக்ரைன் மோதல் இலங்கை அரசு நடுநிலை

கொழும்பு, பெப். 26

"ரஷ்யா, உக்ரைன் விவகாரத்தில் எந்தவொரு பக்கத்துக்காகவும் கதைக்க முடியாது. இது விடயத்தில் இலங்கை நடுநிலை வகிக்கும்." - என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"உக்ரைன், ரஷ்ய விவகாரம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்விரு நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள மோதல் நிலை இலங்கை பொருளாதாரத்திலும் தாக்கம் செலுத்தும். சுற்றுலாத்துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

உக்ரைனில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் எகிப்தில் உள்ள தூதரகம் தொடர்பில் உள்ளது. பிரச்சினைகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பதையே இலங்கை விரும்புகின்றது." - என்றும் அவர் கூறினார். (அ)

# அரச தாதியர் சங்கம் ஆர்ப்பாட்டம் செய்ய மார்ச் 11ஆம் திகதி வரை நீதிமன்றம் தடை

கொழும்பு, பெப். 26

அரச தாதியர் சங்கத்துக்கு எதிர்வரும் மார்ச் 11ஆம் திகதி வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுதற்கு தொடர்ந்தும் தடை விதித்து நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை உடனடியாக இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கக் கோரி அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்ன பிரிய ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர், வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதனையடுத்து, அரச தாதியர் சங்கம் மேற்கொண்டிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் கடந்த 10ஆம் திகதி நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரேமலால் ஜயசேகரவின் தீர்ப்பு மார்ச் 31ஆம் திகதி!

கொழும்பு, பெப். 26

இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தினால் தமக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி அறிவிக்க வுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

இந்த மேல்முறையீட்டு மனுக்களின் விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழு முன் நவம்பர் 08, 2021 அன்று தொடங்கியது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் பேரணி மீது தாக்குதல் நடத்தி ஒருவர் கொல்லப்பட்டு இருவரை காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் பிரேமலால் ஜயசேகர மற்றும் கஹவத்தை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வஜிர தர்ஷன உள்ளிட்ட மூவருக்கு எதிராக இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வழக்கின் விசாரணையின் பின்னர் தீர்ப்பை அறிவித்த இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி, குற்றம் சாட்டப்பட்டவர்களை தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் என அறிவித்து 2020 ஜூலை 31 அன்று மரண தண்டனை விதித்தார். இரத்தினபுரி மேல் நீதிமன்ற நீதிபதி தமக்கு மரண தண்டனை விதித்த விதம் சட்டத்துக்கு முரணானது என்பதனால் தம்மை விடுவிக்குமாறு கோரி பிரதிவாதிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

அதன்படி, மனுக்களை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் மார்ச் 31ஆம் திகதி தீர்ப்பை வழங்க தீர்மானித்துள்ளது. (அ)

## மின் துண்டிப்பின் விளைவு:

# தடுப்பூசிகளை சுகாதார அமைச்சு களஞ்சியப்படுத்துவதில் சிக்கல்!

கொழும்பு, பெப். 26

மின்சார துண்டிப்பு காரணமாக, கோவிட்-19 தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்தியுள்ள குளிரூட்டிகளை பராமரிப்பதற்காக, மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, எரிபொருள் தொடர்ச்சியாக அவசியமாக உள்ளதென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் கையிருப்பில் உள்ள கோவிட்-19 தடுப்பூசிகள் எதிர்வரும் ஜூலை மாதத்துடன் காலாவதியாகும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில், நாட்டில் அமுலாக்கப்படும் மின் தடை காரணமாக, கோவிட்-19 தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்தியுள்ள குளிரூட்டிகளை பராமரிப்பதற்காக, தொடர்ச்சியான எரிபொருள் வினியோகம் அவசியமாகும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மின் தடை அமுலாக்கப்படும் காலப்பகுதிகளில், குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களுக்கு, மேலதிக மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

எவ்வாறிருப்பினும், எரிபொருள் கிடைக்காவிட்டால், மேலதிக மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும்.

எனினும், தற்போது வரையில் இதுபோன்ற பிரச்சினை ஏற்படவில்லை என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

# இந்தியத் தூதுவருடன் விமல் வீரவன்ஸ பேச்சு!

கொழும்பு, பெப். 26

கைத்தொழில் துறைகளில் இந்திய - இலங்கை ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ இந்திய தூதுவர் கோபால் பாக்லேவை நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் வகிபாகம் குறித்து அமைச்சர் விமல் வீரவன்ஸ கடுமையாக விமர்சித்து வந்த நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமான வகையில் அமைந்ததாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# பொலிகண்டி கடற்கரையில் ஒதுங்கியது படகுப் பாதை!

யாழ்ப்பாணம், பெப். 26

வடமராட்சி, பொலிகண்டி கடற் கரையில் படகு பாதை ஒன்று நேற்று கரை ஒதுங்கியுள்ளது.

வடமராட்சி - பொலிகண்டி குழந்தையேசு ஆலய பகுதிக்கு அண்மித்த கடற்கரையில் இந்த படகுப் பாதை கரையொதுங்கியுள்ளது.

இவ்வாறு கரை ஒதுங்கிய படகுப் பாதை கனரக வாகனங்கள் போன்ற பாரமான பொருட்களை கடல்வழி போக்குவரத்தில் ஏற்றி இறக்குவதற்காக பயன்படுத்தப்படுவதாகும்.

இப் படகு பாதை எப்படி கரை ஒதுங்கியது என்பது தொடர்பில் பொலிஸார் உட்பட பாதுகாப்பு தரப்பு தற்போது பல கோணங்களிலும் விசாரணைகள் மேற்கொண்டுள்ளது. (அ)



### நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# முகக்கவசம் அணியாதோருக்கு கட்டாய பி.சி.ஆர். பரிசோதனை!

யாழ்ப்பாணம், பெப். 26

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அநாவசியாமாக வீதிகளில் நிற்போர் மற்றும் முகக்கவசம் அணியாது பயணிப்போருக்கு கட்டாய பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலகமும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரும் இணைந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் அநாவசியமாக நிற்போர், வீதிகளில் முகக்கவசமின்றி பயணிப்போருக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாண பொலிஸாரின் பாதுகாப்புடன் நல்லூர் பகுதியில் வீதியில் தேவையற்று நடமாடுவோருக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. (அ)

# மன்னார் மாவட்டத்தில் எரிபொருள் தட்டுப்பாடு

### பொதுமக்கள் அவதி

மன்னார், பெப். 26

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை முதல் எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் இன்மையால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரி பொருள் இன்மையால் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். அதே நேரம் போக்குவரத்து சேவைகளும் முடக்கமடைந்துள்ளன.

அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அதிகாரிகளும் பெற்றோல் இன்மையால் பாரிய சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். (அ)

# மேலும் 314 பேர் குணமடைவு!

கொழும்பு, பெப். 26

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் 314 பேர் குணமடைந்து நேற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 8 ஆயிரத்து 226 அக அதிகரித்துள்ளது. (அ)

# எந்த விசாரணையையும் எதிர்கொள்ள நான் தயார்

### ஹரின் பெர்னாண்டோ அறிவிப்பு

கொழும்பு, பெப். 26

பாராளுமன்றத்தில் ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக எவ்வாறான விசாரணைகளையும் எதிர்கொள்ள தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எனது சிறிய பை ஒன்றையும் மின் பந்தம் ஒன்றையும் பாராளுமன்றத்திற்கு எடுத்து வந்தேன் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு தடையை ஏற்படுத்தி சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்றை பாராளுமன்றத்துக்குள் கொண்டு வந்ததாக ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அவையில் சுமத்திய குற்றச்சாட்டுக்கு நேற்று பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

ஹரின் பெர்னாண்டோ சபை தலைமை தாங்கிய உறுப்பினரின் அனுமதியுடன் இந்த பதிலை அளித்துள்ளார்.

எனது பை பொருட்களை பரிசோதிக்கும் இயந்திரம் மூலம் பரிசோதிக்கப்பட்டது. ஆபத்தான எதனையும் நான் பாராளுமன்றத்துக்குள் கொண்டு வரவில்லை.

அத்துடன் பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கும் தடையேற்படுத்தவில்லை எனவும் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

அத்துடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சம்பந்தமாக அடுத்த வாரம் ஒரு விடயத்தை செய்ய தயாராகி வருவதாகவும் அந்த பணிக்கு தடையை ஏற்படுத்த வேண்டாம் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாகவும் ஹரின் பெர்னாண்டோ மேலும் கூறினார். (அ)

# எரிபொருள் இன்மையால் தொடர்ந்தும் செயலிழந்துள்ளன மின் நிலையங்கள்!

கொழும்பு, பெப். 26

எரிபொருள் இன்மையால், மின்னுற்பத்தி நிலையங்கள் தொடர்ந்தும் செயலிழந்த நிலையில் உள்ளன.

கொழும்பு துறைமுக பத்தல மின் முனையம் உலை எண்ணெய் இன்மையால், நேற்று மதியத்துடன் செயலிழப்பதாக மின்சார சபை பேச்சாளர் அன்றூ நவமணி தெரிவித்தார்.

அதேநேரம், தற்போது 165 மெகாவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின் மையம் மற்றும் 115 மெகா வொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் களனி திஸ்ஸ மின்னுற் பத்தி நிலையம் என்பன எரிபொருள் இன்மையால் செயலிழந்துள்ளன.

அத்துடன், மத்துகம மின்னுற்பத்தி நிலையம், துல்கிரிய மின்னுற்பத்தி நிலையம் மற்றும் கெரவலப்பிட்டி மேற்கு முனைய மின்னுற்பத்தி நிலையம் என்பனவும் எரிபொருள் இன்மையால் செயலிழந்துள்ளன.

நேற்று மதியம் பத்தல மின்னுற்பத்தி நிலையமும் செயலிழந்தமையால், மின்சார விநியோகத்திற்கு பாரிய பாதிப்பு ஏற்படுவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார சபைக்கு எரிபொருளை வழங்குவதாக சில அதிகாரிகள் அறிவிப்புக்களை வெளியிட்டுள்ள போதிலும், இதுவரை அவசியமான எரிபொருள் கிடைக்கப் பெறவில்லை என அந்த சபையின் பேச்சாளர் அன்றூ நவமணி குறிப்பிட்டார். (அ)

# பேராதனை பல்கலை பட்டமளிப்பிலிருந்து வீடு திரும்பிய குடும்பம் விபத்தில் சிக்கியது

### ஒருவர் உயிரிழப்ப்பு நான்கு பேர் படுகாயம்

கொழும்பு, பெப். 26

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பின் பின் வீடு திரும்பிக் கொண்டிருந்த, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேரை ஏற்றிச் சென்ற சொகுசு கார் ஒன்று, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 29 கிலோமீற்றர் தொலைவில் தொடங்கொட பகுதியில் சிமெந்து ஏற்றப்பட்ட லொறியுடன் மோதியது.

உயிரிழந்தவர் அக்மீமன பகுதியைச் சேர்ந்த 67 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, விபத்தில் மோட்டார் வாகனச் சாரதிக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் அவரது தந்தையே உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 29 வயதுடைய மகளின் மருத்துவப் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பட்டம் பெற்ற யுவதிம் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# இரணைதீவில் கைதான இந்திய மீனவர்களை திங்கட்கிழமை முன்னிலையாகுமாறு உத்தரவு

கிளிநொச்சி, பெப். 26

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 13ஆம் திகதி எல்லை தாண்டி மீன் பிடித்துக்கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களையும் அவர்களின் இரண்டு படகுகளுடன் கைது செய்த கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வளதிணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து அவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.பாலசுப்ரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இதன்போது எதிர்வரும் திங்கட்கிழமை குறித்த இந்திய மீனவர்களை மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் அன்றைய தினம் குறித்த இரண்டு வழக்குகளுக்கும் குற்றச்சாட்டு பத்திரங்களை தாக்கல் செய்யுமாறும் நீதிமன்றம் கட்டளை இட்டது. (அ)

ஈழநாடு



# பயங்கரவாத தடைச் சட்டமும் பலியாகும் நியாயங்களும்!

**பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை "பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும். அல்லது முழுமையாக மாற்றப்படவேண்டும். இச்சட்டத்தை பாவித்து குற்றவாளிகளைத் தப்ப வைத்து அப்பாவிகளை ஆட்சியாளர்கள் சிறையில் அடைத்து வருகின்றனர்" எனத் தெரிவித்துள்ளமையை யாரும் அலட்சியம் செய்துவிடமுடியாது.**

நா.யோகேந்திரநாதன்



கடந்த 22 மாதங்களாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு அண்மையில் விடுதலை செய்யப்பட்ட பிரபல சட்டத்தரணியும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமாகிய ஹஜாஜ் ஹில்புல்லா அவர்கள் விடுவிக்கப்பட்டபோது அத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி நீல் இத்நாவல வெளியிட்ட கருத்துக்கள் மிகமிக முக்கியமாக உற்று நோக்கப்படவேண்டியவையாகும்.

அவர் பயங்கரவாதத் தடைச்சட்டம் 1979ம் ஆண்டு விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தக்கொண்டு வரப்பட்ட ஒரு தற்காலிக ஏற்பாடு எனவும், ஆனால் அது தற்சமயம் அரசியல் பழிவாங்கல் போன்ற மோசமான செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதெ னவும் தனது தீர்ப்பின்போது கண்டனம் செய்திருந்தார்.

இப்படியான சந்தர்ப்பத்தில் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் நீதிமன்றங்களைப் பிழையாக வழிநடத்த முயல்கிறார்களோ என்ற சந்தேகம் எழுவது தவிர்க்கப்பட முடியாததாகிறது.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினரான ஒரு உயர் மட்டப் பொலிஸ் அதிகாரி, தற்கொலைக் குண்டுதாரி சஹ்ரானின் மனைவியான சரா என்றழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரன் உயிருடன் தப்பிச் செல்ல அபூபக்கர் என்ற உதவிப் பொலிஸ் பரிசோதகர் உதவினார் எனக் குற்றம் சாட்டியிருந்தார். அதன் அடிப்படையில் அவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 2 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். விசாரணை அதிகாரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றார். தற்சமயம் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையில் இது பொய்யான குற்றச்சாட்டு எனக் கண்டு பிடிக்கப்பட்ட நிலையில் அந்த விசாரணை அதிகாரி அமெரிக்காவுக்குத் தப்பியோடி விட்டார்.

சில தரப்பினர் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்தவும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காகவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பாவித்து நியாயங்களைக் குழிதோண்டிப் புதைப்பது தொடர்பாக ஆணித்தரமாக வெளிவந்த இரு விடயங்களாகும். ஆனால் இச்சட்டத்தைப் பயன்படுத்தி ஏற்கனவே ஏராளமான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன., மேலும் மேலும் இடம்பெற்றும் வருகின்றன.

அண்மையில்கூட 12 வருடங்களாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 52 வயது நபர் குற்றமற்றவராக நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார். அநீதியான முறையில் 12 வருடங்கள் தண்டனை அனுபவித்த அவருக்கு நியாயங்களை எங்கு போய்த் தேட முடியும்.

இச்சட்டம் 1979இல் விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் கூட அது தமிழ், முஸ்லிம், சிங்களம் என இனமதபேதமின்றி அனைத்து இனங்கள் மீது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக அநீதிகளுக்கு எதிராகத் துணிச்சலாகக் குரல் கொடுப்பவர்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இனம் தெரியாதவர்களால் படுகொலை செய்யப்படுவார்கள் அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்பதுதான் நியதியோ எனக் கேட்குமளவுக்குச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.




இந்த நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது. இதன் உறுப்பினர்கள் இந்த ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்டவர்களென்பதும் குறிப்பிடத்தக்கது. அது மட்டுமின்றி சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்து இச்சட்டத்தை நீக்கவேண்டுமென வலியுறுத்தி வருகின்றன.

எல்லாவற்றையும்விட பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை அடங்கிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30ஃ1 தீர்மானத்துக்கு இலங்கையும் அனுசரணை வழங்கியிருந்தது.

ஆனால், இலங்கை அரசாங்கமோ இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கத் தயாரில்லை. மாறாக சர்வதேசத்தை ஏமாற்றும் வகையில் அச்சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது.

சர்வதேச ரீதியாக எழும் அழுத்தங்களைச் சமாளிக்கவே இந்தத் திருத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஏற்கனவே ஒருவர் 18 மாதம் தடுத்து வைக்கப்படுவது 12 மாதங்கள் என மாற்றப்பட்டுள்ளதும், விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு வழக்குகள் விரைவாக முடிக்கப்படுமென்பதும் நீதிபதிகள், சட்டத்தரணிகள் தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பார்வையிடமுடியும் என்பதும் கொண்டு வரப்பட்ட புதிய திருத்தங்களாகும். இது பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை.

இத்திருத்தங்களின் பின்பும்கூட அரசியல் பழிவாங்கல்கள், போதிய ஆதாரமின்றிக் கைது செய்தல், சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுதல் என்பன தடுத்து நிறுத்தப்படமுடியாது என்பது கவனத்தில் எடுக்கவேண்டும். ஆனால் வெளிவிவகார அமைச்சர் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் வகையில் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு உட் பட்டுத் தான் திருத்தங்களைக் கொண்டு வருவதாகக் கூறிவருகிறார்.

ஆனால் நாட்டின் பாதுகாப்புக் கருதியும், மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்காமல் தடுக்கவும் பயங்கரவாதத்தின் சில விதிகள் அமுலில் இருக்கவேண்டுமென அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டு வருகிறது.

இப்பயங்கரவாதத் தடைச் சட்டம் பொலிஸாருக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கும் எல்லையற்ற அதிகாரங்களை வழங்குகிறது. இவர்கள் அரசியல் அதிகாரத்தால் வழிநடத்தப்படமுடியும் என்பது அப்படியொன்றும் பரம இரகசியமல்ல.

எனவே அரசியல் எதிரிகளைப் பழிவாங்குதல், அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் இலக்கு வைக்கப்படுதல், உண்மையான குற்றவாளிகளைத் தப்ப வைத்தல் போன்ற முறைகேடுகள் இச்சட்டத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. இனியும் மேற்கொள்ளப்படமாட்டா என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. பல ஊடகவியலாளர்களை, மனித உரிமை செயற்பாட்டாளர்களை நாட்டை விட்டு ஓட வைத்த பெருமை இச்சட்டத்துக்கு உண்டு.

இன்று நாட்டில் உருவாகியுள்ள வாழ்க்கைச் செலவு உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றமும் தட்டுப்பாடும், ஊதிய உயர்வு கோரி பல்வேறு தரப்பினரும் நடத்தும் போராட்டங்கள், எங்கும் விரிவடையும் இலஞ்சம், ஊழல் மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் போதைவஸ்து, பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் போன்ற முறைமீறல்கள் காரணமாக நாடு ஒரு இக்கட்டான நிலை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. எனவே தொழிலாளர்கள், விவசாயி கள், அரச பணியாளர்கள் ஆகிய தரப்பி னரின் போராட்டங்கள் வலுப்படுத்துவ தும், மக்கள் ஆட்சிக்கு எதிராக வீதிக்கு இறங்குவதும் தவிர்க்க முடியாத நிலையாக ஏற்பட்டு விடும்.

எனவே இவற்றை அடக்கி ஆட்சியைத் தக்கவைக்க வேண்டுமானால் அரசாங்கத்தின் கையில் வலுவானதொரு அடக்குமுறைச் சட்டம் அவசியம். தேசத்தின் பாதுகாப்பின் பேரால் இச்சட்டம் கட்டவிழ்த்துவிடப்பட்டு சகல மக்கள் போராட்டங்களும் ஒடுக்கப்படும். இதற்கு ஏற்கனவே இராணுவ மயப்படுத்தப்பட்ட சிவில் நிர்வாகம் வாய்ப்புகளை வழங்கும். எனவே இதுவரை தமிழ், முஸ்லிம் மக்களின் கழுத்துகளை நெரித்த பயங்கர வாதத் தடைச்சட்டம், சிங்கள மக்கள் மேலும் பாய்வதற்கு வெகு நாட்கள் எடுக் காது. ஒட்டு மொத்தத்தில் இச்சட்டத் திற்கு நியாயங்கள் பலியாக்கப்படுவதே எதிர்காலமாக அமையு மென்றே தோன்று கிறது. பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை "பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும். அல்லது முழுமையாக மாற்றப்படவேண்டும். இச்சட்டத்தை பாவித்து குற்றவாளி களைத் தப்ப வைத்து அப்பாவிகளை ஆட்சியாளர்கள் சிறையில் அடைத்து வருகின்றனர்" எனத் தெரிவித்துள் ளமையை யாரும் அலட்சியம் செய்துவிடமுடியாது. - **அருவி**

# உக்ரைன் பிரச்னை உலக நாடுகளின் பிரச்னையாக மாறப்போகிறதா?



**இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹிட்லரின் நாஜி படைகள் தாக்கியது போல, அகோரமான தாக்குதல்கள் உக்ரைன் மீது நடப்பதாகக் குறிப்பிட்ட உக்ரைன் பிரதமர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி 'இந்த நாடு தனது சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காது, மக்களாகிய நீங்கள் அமைதி காக்க வேண்டும்' என்று ஊடகங்கள் மூலம் அறிவித்தல் விட்டார்.**

**குரு அரவிந்தன்**

உக்ரைன் பிரச்சனை உலகப் பிரச்னையாக மாறப்போகிறதா? என்ற கேள்விக்கு "ஆம்" என்ற பதில்தான் எல்லோர் மனதிலும் உருவாகி இருக்கின்றது. கோவிட் - 19 காரணமாக உலகமக்கள் ஒருபக்கம் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்க, ஒரு சாரார் கோடீஸ்வரர்களாக மாறியிருந்தது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இப்போது ஆயுதவிற்பனை செய்யும் நாடுகள் இன்னுமொரு தந்திரமாக, உலக நாடுகளைச் சிக்கவைத்திருக்கின்றன. உக்ரைன் பிரச்சனை உக்ரைனை மட்டுமல்ல, உலக நாடுகள் அனைத்தையும் பாதிக்கப் போகின்றது.

முக்கியமாக சுற்றிவர உள்ள ஐரோப்பிய நாடுகள் தங்கள் பாதுகாப்பிற்காக மேலதிக ஆயுதங்களை வாங்கவேண்டிய நிலையில் இருக்கின்றன. ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து தாக்குதல்கள் ஆரம்பித்திருக்கின்றன. உக்ரைன் தலைநகரமான கிய்வில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் கட்டிடங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரம் கிழக்கு உக்ரேனில் ரஷ்ய எல்லைப் பகுதியில் உள்ள டொநெக்ஸ் என்ற மாகாணமும் தாக்கப் பட்டிருக்கின்றது.

அன்டொநொவ் விமானத்தளத்தை ரஷ்யப் படைகள் கைப்பற்றி இருக்கின்றன. மறுபக்கம் பெலாரஸ், கிரிமியா எல்லைகளில் குவிக்கப்ட்டிருந்த ரஷ்யாவின் கனரகவாகனப் படையணிகள் உள்நோக்கி முன்னேறி இருக்கின்றன. யுத்தத்தில் இரண்டு பக்கமும் உயிர் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. நான் முன்பு எனது கட்டுரையில் குறிப்பிட்டது போல, உக்ரைன் படையெடுப்பை ஆதரிக்கும் நாடுகள், எதிர்க்கும் நடுகள், பக்கம்சாரா நாடுகள் என்று மூன்று வகையாக நாடுகள் இப்போது பிரிந்திருக்கின்றன.

தனது நாட்டின் எல்லைப் பாதுகாப்புக் கருதி, நேட்டோவில் இணையக் கூடாது என்று ரஷ்யா உக்ரைனைக் கேட்டுக் கொண்டது. நேட்டோ என்பது வடஅத்திலாண்டிக் ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organization) என்று பொருள்படும். தொடக்கத்தில் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய, 12 நாடுகள் ஒன்று சேர்ந்து இந்த அமைப்பை உருவாக்கின. அதன்பின் பல நாடுகள் இதில் இணைந்து கொண்டன.

தங்களுக்குள் உதவிகளைச் செய்வதும், ஏதாவது அங்கத்துவ நாட்டுக்கு ஆபத்தான நேரத்தில் இராணுவ உதவி செய்வதும் இதன் நோக்கம். ஏற்கனவே அயல் நாடுகளான போலாந்து, எஸ்டோனியா, லித்துவெனியா ஆகிய நாடுகளில் நேட்டோ படைகள் நிலைகொண்டிருக்கின்றன. அவற்றையும் அங்கிருந்து விலக்க வேண்டும் என்பதே ரஷ்யாவின் வேண்டுகோள். உக்ரைன் இதில் சேர்ந்தால் தனது எல்லையில் நேட்டோவின் இராணுவம் குவிக்கப்டலாம் என்றும், அதனால் தனது நாட்டு பாதுகாப்புக்கு ஆபத்து நேரலாம் என்பதுதான் ரஷ்யாவின் வாதம்.

உக்ரைனைவிட ஏனைய சில நாடுகளும் ரஷ்யாவின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இதை அலட்சியம் செய்யும் வகையில் ரஷ்யா தனது படைகளை உக்ரைன் எல்லையில் குவிக்கத் தொடங்கியது. இது சும்மா வெறும் மிரட்டல்தான் என்று ரஷ்யா திரும்பத் திரும்ப உலக நாடுகளுக்குப் பதிலளித்தது. உக்ரேனுடனான யுத்தத்திற்கு ஏற்ற எல்லா ஏற்பாடுகளையும் ரஷ்யா இந்த இடைவெளியைப் பயன்படுத்தி செய்திருந்தது. எல்லையில் உள்ள நீர்நிலையில் ரஷ்ய இராணுவ வண்டிகள் இலகுவாகக் கடந்து செல்வதற்கு குறுக்காகப் பாலம் கூட அமைத்திருந்தது. முதலில் தனக்குச் சாதகமான கிளர்ச்சியாளர்களின் பகுதிகளை சுதந்திரபிரதேசமாகப் பிரகடனப் படுத்தியது.

இச்சந்தர்ப்பத்தில் உக்ரைன் மீது



பெரியதொரு படையெடுப்புக்கு ரஷ்யா தயாராகிறது என்று அமெரிக்கா உக்ரைனை எச்சரித்திருந்தது. 'ஓநாய் வருகிறது' என்ற கதைபோல கடந்த இரண்டு மாதங்களாக நடந்த கதை இப்போது நிஜமாகிவிட்டது.

பல மணி நேரம் ஏவுகணைத்தாக்குதல்களையும், யுத்த விமானங்கள் மூலம் வான்தாக்குதல்களையும் நடத்திய ரஷ்யா, தற்போது பரசூட்கள் மூலம் இராணுவ வீரர்களை முக்கியமான இடங்களில் தரை இறக்கி இருக்கின்றது. உக்ரைனின் விமானத் தளங்களைத் தாக்கியும், வான்பாதுகாப்பு நிலைகளைத் தகர்த்து விட்டதாகவும் ரஷ்யா அறிவித்திருக்கின்றது. வான்தாக்குதலுக்குப் பயந்து மக்கள் தொடர்வண்டிச் சுரங்கங்களில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். ரஷ்யாவின் 5 போர் விமானங்களையும், ஒரு ஹெலிக்கொப்டரையும் சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்திருக்கின்றது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹிட்லரின் நாஜி படைகள் தாக்கியது போல, அகோரமான தாக்குதல்கள் உக்ரைன் மீது நடப்பதாகக் குறிப்பிட்ட உக்ரைன் பிரதமர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி 'இந்த நாடு தனது சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காது, மக்களாகிய நீங்கள் அமைதி காக்க வேண்டும்' என்று ஊடகங்கள் மூலம் அறிவித்தல் விட்டார்.

உக்ரைன் யுத்தத்தை எதிர் கொள்ள அவசரகால நிலையை அறிவித்து, தனது வான்வெளியை மூடியிருக்கின்றது. இதனால் ஆயிரக்கணக்கான விமானங்கள் பாதைகளை மாற்ற வேண்டி வந்தது மட்டுமல்ல, உக்ரைனுக்கான சர்வதேச விமானப் போக்குவரத்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

உக்ரைன் வெளிநாட்டமைச்சர் தங்கள் நாட்டுக்கு உதவும்படி இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளைக் கேட்டிருக்கின்றார். இந்தியப் பிரதமர் மோடியும் ரஷ்ய ஜனாதிபதியடன் இது பற்றி உரையாட இருப்பதாகத் தெரிகின்றது. கனடா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் முதற்கட்ட நடவடிக்கையாக பொருளாதாரத் தடை விதித்திருக்கின்றன. ஜி - 7 நாடுகளும் உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன. பொருளாதார ரீதியாக உடைந்து போயிருந்த ரஷ்யா, இதைச் சாட்டாக வைத்து எரிபொருளின் விலையை உயர்த்தப் போவதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குறிப்பிட்டிருக்கின்றார்.

மேலை நாடுகள் ஓரளவு ஊகித்துக் கொண்டதால், தமது நாட்டுப் பிரசைகளை உடனடியாக உக்ரைனைவிட்டு வெளியேறச் சொல்லி இருந்தன. ஆனால் இதை அலட்சியம் செய்த சில நாடுகள் இப்பொழுதுதான் விழித்துக் கொண்டு, காலம் கடந்தபின் தங்கள் பிரசைகளுக்கு என்ன நடக்குமோ என்று கூக்குரல் எழுப்புகின்றன.

சாதாரணமாக 20,000 ரூபாவுக்குக் கிடைக்கும் விமானக்கட்டணம், இப்போது 60,000 கொடுக்க வேண்டி வந்ததாக, உக்ரைனில் இருந்து பாதுகாப்பாக வந்து சேர்ந்த இந்திய மாணவர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். மேற்கொண்டு இந்திய பிரசைகளை உக்ரைனில் இருந்து மீட்பதற்கு புது டில்லியில் இருந்து அனுப்பப்பட்ட விமானம், வான்வெளி மூடப்பட்டதால் வெறுமனே திரும்பி வந்திருக்கின்றது. உக்ரைன் - ரஷ்ய யுத்தத்தால் ஏற்கனவே தங்கம், வெள்ளி போன்றவற்றின் விலை உயர்ந்து விட்டது. சில பங்குச் சந்தையிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ரஷ்யா எரிபொருள், கோதுமை போன்றவற்றை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாக இருக்கின்றது. இந்த யுத்தம் காரணமாக முதலில் போக்குவரத்திற்குத் தேவையான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படப் போகின்றது. இதனால் எரிபொருள் விலை உயர்ந்ததும், உணவுப்பொருட்களை கொண்டு செல்வதில் தடங்கல் ஏற்படும் அல்லது அதற்கான விலை அதிகரிக்கும். இதனால் உணவுப் பொருட்களின் விலை உயரும், ஆனால் சாதாரண மக்களின் வருமானம் உயரப்போவதில்லை. இறுதியில் அப்பாவிப் பொதுமக்கள் தான் பாதிக்கப்படப் போகிறார்கள்.

ஏற்கனவே கடந்த இரண்டு வருடங்களாகக் கோவிட்-19 பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மக்கள்தான் மீண்டும் பாதிக்கப்படப் போகிறார்கள். 'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது' போல, பணம் சேர்ப்பவர்கள் மேலும் மேலும் கோடீஸ்வரராகிக் கொண்டிருப்பார்கள். நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது சாதாரண மக்கள்தான் அதிகம் பாதிக்கப்படப் போகிறார்கள்.

ரஷ்யாவின் பாதையில் யார் குறுக்கிட்டாலும் மோசமான பாதிப்பைச் சந்திக்க நேரிடும் என்று ரஷ்ய நாட்டு ஜஅதிபர் விளாடிமிர் புதின் எச்சரிக்கை விட்டிருக்கின்றார். ரஷ்யாவின் இந்தச் துணிச்சலுக்கு யார் பின்னணியில் இருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே!

முகநூல் பதிவுகளில் இருந்து அங்கே நடக்கும் விமான, ஏவுகணைத் தாக்குதல்களைப் பார்க்க முடிகின்றது. மண்ணாசை, பொன்னாசையாக மாறி இறுதியாகப் பெண்ணாசையாக மாற வாய்ப்புண்டு. எந்த ஒரு நாடும் வேற்று நாடுகளுக்குள் படையெடுத்துப் புகுந்ததும் முதலில் பாதிக்கப்படுவது, அங்குள்ள அப்பாவிப் பெண்களும் குழந்தைகளுமே. அவர்களைத்தான் முதலில் பகடைக் காய்களாக இராணுவத்தினர் பாவிப்பார்கள். கடந்தகால யுத்த வரலாற்றை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு படையெடுப்பிலும் எப்படிப் பெண்களும் குழந்தைகளும் பாதிக்கப்பட்டனர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தாயகத்திலும் சரி, பங்களாதேஷ், வியட்நாம் போன்ற நாடுகளிலும் சரி, நடந்ததை நினைத்துப் பார்த்தால் இப்பொழுதும் அந்த வலியை மறக்கமுடியாது. இறுதி வாரங்களில் முள்ளிவாய்க்காலில் எப்படி அவலக்குரல் கேட்டதோ, அதே போன்ற ஒரு நிலைக்கு இன்று உக்ரைன் தள்ளப்பட்டு இருக் கின்றது. யாரெல்லாம் ஒன்று சேர்ந்து எங்களை அடித்தார்களோ, அவர்களே இன்று இரண்டாகப் பிரிந்து மோதிக் கொண்டு நிற்பது வேடிக்கையாக இருக்கின்றது. ■

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


16) 30425 என்ற எண்ணில் இலக்கம் 4 இன் இடப்பெறுமானம் யாது?

……………………………………………………………………………………………

17) 4 தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோம எண்குறியில் 7 என்பதை வகை குறித்துக் காட்டலாம். எனின், 17 என்பதை உரோமன் எண்குறியில் காட்டுவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவைப்படும்.

……………………………………………………………………………………………

18) பின்வரும் உருவில் $\frac{1}{2}$ பங்கினை பென்சிலால் அல்லது பேனவால் நிழற்றிக் காட்டுக.



19) பாத்திரம் ஒன்றின் கொள்ளளவு 3 லீற்றர் ஆகும். அப்பாத்திரத்தில் 1 லீற்றர் 400 மில்லி லீற்றர் அளவு நீர் உள்ளது. அப்பாத்திரம் முழுமையாக நிரப்புவதற்கு மேலும் தேவைப்படும் நீரின் அளவு யாது?

…………….. லீற்றர் ……………….. மில்லிலீற்றர்

20) 636 புத்தகங்களை 6 பாடசாலைகளுக்கு சமமாக பகிர்ந்தளிக்கும் போது ஒரு பாடசாலைக்கும் கிடைக்கும் புத்தகங்கள் எத்தனை?

……………………………………………………………………………………………

21) கடையொன்றில் உள்ள 68 முட்டைகளில் $\frac{3}{4}$ விற்பனை செய்தால் எஞ்சிய முட்டைகளின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………………………

22) குமாரின் வயது 12 வருடங்கள் 6 மாதங்களும், நாதனின் வயது 7 வருடங்கள் 8 மாதங்களும் ஆகும். இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை யாது,

…………… வருடங்கள் ………………… மாதங்கள்

23) கரும்பலகையின் அகலம் 12m25cm ஆகும். இதன் நீளம் அகலத்தின் மூன்று மடங்காகும். கரும்பலகையின் நீளம் யாது?

……………………………………………………………………………………………

24) 10m நீளமான கயிற்றுத் துண்டில் 45cm நீளமான 6 துண்டுகள் வெட்டப்பட்டால் மிகுதித்துண்டின் நீளம் யாது?

……………………………………………………………………………………………

25) 3kg சீனியை 250g கொண்ட எத்தனை சரைகளில் கட்டலாம்?

……………………………………………………………………………………………

26) பிற்பகல் நான்கு கடந்து நாற்பத்தைந்து நிமிடம் என்பதை 24 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரமாக எழுதுக.

……………………………………………………………………………………………


27) மு.ப 10.30 மணிக்கு ஆரம்பித்த கண்காட்சி பி.ப 4.10 மணிக்கு நிறைவடைந்தது. எனின், கண்காட்சி நடைபெற்ற நேரம் எவ்வளவு?

…………………மணித்தியாலம் ……………………….. நிமிடங்கள்

## விடைகள்

16) 100 / நூறுகள் / நூறு
17) 6 தீக்குச்சிகள்
18) ஏதாவது இரண்டு முக்கோணம்

உ – ம்



19) 1 600
20) 106
21) 17
22) 20 2
23) 36m75cm / 3675 cm
24) 7m 30cm / 730cm
25) 12
26) 16:45
27) 5 40

### கல்வி tv CHANNEL-1 — 26.02.2022 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2 — 26.02.2022 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# வலம்புரி சங்குடன் கிரானில் ஒருவர் கைது!

வாழைச்சேனை, பெப். 26
கிரான் பிரதேசத்தில் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வலம்புரி சங்கு ஒன்றை விற்பனைக்காக கொண்டு வந்த நபரை வாழைச் சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான நபர் வாழைச் சேனையைச் சேர்ந்தவர் ஆவார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் வழிநடத்தலில் சம்பவதினமான நேற்றுமுன்தினம் மாலை குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸார் வலம்புரி சங்கு வாங்குவது போன்று நடித்து சங்கை கிரான் எடுத்துவருமாறு தெரிவித்தனர்.

அந்த நபர் வலம்புரி சங்கை விற்பனைக்காக எடுத்து கொண்டு வந்தபோது கைது செய்யப்பட்டு வாழச் சேனை சிவில் உடையில் நின்ற பொலி ஸாரிடம் வழங்கியுள்ளார். இதையடுத்து அவரைப் பொலி ஸார் கைது செய்தனர். (ஐ)

# தொடர் மின்சார தடையால் உயர்தர பரீட்சை பெறுபேறு பாதிக்கப்படும்!

ஏறாவூர், பெப். 26
தற்போது அமுல்படுத்தப் படும் மின்சார தடை, உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்களின் பரீட்சைப் பெறு பேறுகளில் பாதிப்பை ஏற்படுத் தும் என ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம்.எஸ். நளீம் தெரி வித்தார்.

அந்தச் சபையின் 47ஆவது மாதாந்த அமர்வு, நகர சபைக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்வுக்கு தலைமை தாங்கிய அவர் தனதுரையில் மேலும் குறிப்பிட்டதாவது,

"தற்போதைய மின்சாரத் தடை காரணமாக மாணவர்களின் கல்வி முற்று முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளது. இரவு 6 மணி தொடக்கம் 10 மணி வரை மாணவர்கள் மீட்டல் செயல்பாடுகளில் ஈடுபடுகின்ற நேரங்களைக் குறி வைத்து மின்சாரம் தடைப்படுத்தப் படுகின்றது. இது அவர் களது பரீட்சைப் பெறு பேறுகளில் கணிசமான அளவு பின்னடைவை ஏற்படுத்தும். அது போதாக் குறைக்கு பகல் வேளை யிலும் மின்வெட்டு.

"இதனிடையே, மின் வெட்டை தமக்குச் சாதக மாகப் பயன்படுத்திக் கொள் ளும் சமூக விரோதிகள் திருட்டுச் செயல்களிலும் இன்னோரன்ன சமூக விரோத செயல்களிலும் ஈடுபடுகின்றார் கள். இருட்டு வேளையில் போதைப் பொருள் விற்ப னையாளர்கள் சுதந்திரமாக உலாவுகின்றார்கள். துஷ்பிர



யோகமும் இடம்பெறுகின்றது.

"நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமாக, நகர சபையின் வருமானம், மக்களின் வாழ் வாதாரம், தொழிற்றுறைகள், கேள்விக்குறியாக்கப்பட் டுள்ளதோடு, அனைத்துமே முடக்கப்பட்ட நிலையில்தான் உள்ளன - என்றார். (ஐ)

# குப்பிவிளக்கு தீப்பற்றியதில் மூதாட்டி எரிந்து உயிரிழப்பு!

வாகரை, பெப். 26
நித்திரையில் குப்பி விளக்கை தட்டியதால் தீப்பற்றியதில் பெண் ஒருவர் எரிந்து உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு வாகரை - நாகபுரம் - பால்சேனையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், 64 வயதான பூமணிதேவி என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு குப்பி விளக்கை ஏற்றி வைத்து விட்டு சற்றுத் தள்ளி குறித்த பெண் நித்திரையாகியுள்ளார். இந்நிலையில் தூக்கத்தில் விளக்கு தட்டுப்பட்டதில் தீ பரவி அவர் எரிந்து பலியானார் என்று கூறப்படுகின்றது.

நேற்றுக் காலை பெண்ணின் சடலத்தை வாகரை பொலிஸார் மீட்டனர்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்த வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# குப்பிவிளக்கு தட்டுண்டதில் கிண்ணியாவில் வீடு தீக்கிரை!

கிண்ணியா, பெப். 26
மின்வெட்டு அமுல்படுத்தப் பட்டிருந்த நேரத்தில் குப்பி விளக்கு தட்டுண்டமையால் வீடு தீப்பற்றி எரிந்து நாசமானது.

இந்தச் சம்பவம் கிண்ணியா - மாஞ்சோலை முதலாவது ஒழுங்கையில் புதன்கிழமை இரவு 8.40 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது, மின்வெட்டு அமுல்படுத் தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த வீட்டிலிருந்த பிள்ளை கள் குப்பி விளக்கை ஏற்றி படித் துள்ளனர். இதன்போது, குப்பி விளக்கு தட்டுப்பட்டதில் தீப் பற்றி வீடு முழுவதும் பரவி எரிந்தது. தீயை அணைப்பதற்கு அந்தப் பகுதியினர் முயன்ற போதும் வீடு முற்றாக எரிந்து நாசமானது. அங்கிருந்த பெறு மதியான பொருட்கள், மற்றும் ஆவணங்களும் எரிந்து நாசமா கின. (ஐ)

# முதியவர் சடலமாக மீட்பு!

களுவாஞ்சிக்குடி, பெப். 26
களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவாஞ்சி குடி தெற்கு பகுதியில் அமைந் துள்ள மட்டக்களப்பு - கல் முனை பிதான வீதியோரத்தில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட் கப்பட்டவர் ஒத்தாச்சிமடம் 80 வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த 61 வயது ஒரு பிள்ளையின் தந்தை யான தெய்வநாயகம் கணபதிப் பிள்ளை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே. ஜீவராணியின் உத்தரவுக்கமைய சடலத்தைப் பார்வையிட்ட களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி, சட லத்தை பிரேத பரிசோதனைக் குட்படுத்த மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.





# ஹொக்கி கழகத்துக்கு புதிய சீருடை அறிமுகம்!

காரைதீவு, பெப். 26
காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்திற்கு புதிய சீருடையை அரு ளானந்தம் சமூக அறக்கட்டளை நிதியம் ( அஸ்கோ) வழங்கியுள் ளது. ஹொக்கி லயன்ஸ் கழகத்திற்கு எதிர்வரும் காலங்களில் அஸ்கோ எனப்படும் அருளானந்தம் சமூக அறக்கட்டளை நிதியம் அனுச ரணை வழங்கியது.

சீருடை அறிமுக நிகழ்வு காரைதீவு விபுலானந்த விளையாட்டு மைதானத்தில் கழக தலைவர் த. லவன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக ஆலோசகர்களான வி. ரி. சகாதேவராஜா தி. உமாசங்கரன் மற்றும் அஸ்கோ அமைப்பின் சார்பில் அதன் பிரதி களான எஸ். நந்தகுமார் எம். சுந்தரராஜன் கே. லோகேந்திரராஜா மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களான எல். சுலக்சன் வி.பாஸ் கரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# சத்துருக்கொண்டானில் ஒருங்கிணைந்த பண்ணை!

மட்டக்களப்பு, பெப். 26
மட்டக்களப்பு கல்லடி விவ சாய விரிவாக்கல் பிரிவு போத னாசிரியர் வேணி திருநவன் ஒழுங்கமைப்பில் மட்டக் களப்பு சத்துருக்கொண்டான் விவசாய போதனாசிரியர் பிரிவில் உள்ள ஜி. பிரியவரதனின் பண்ணையில் ஒருங்கிணைந்த பண்ணை மற் றும் சேதனை பசளை உற்பத் திக்கான மையம் திறந்து வைக்கப் பட்டது.



மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வன்னியசிங்கம் வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எ.சுதர்சன், மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்க ளத்தின் வைத்திய அதிகாரி எஸ்.டி. எம்.மாஹிர், மட்டக் களப்பு 4ஆவது கெமுனு படைப்பிரிவு இராணுவ அதி காரி மேஜர் நோமல் பெரேரா, அரச முதலீட்டு வங்கியின் பிரதி முகாமையாளர் எஸ். வேனுகீதன், சத்துருக்கொண் டான் விவசாய போதனாசிரியர் பிரிவு உத்தியோகத்தர்கள், பண்ணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன் போது ஒருங்கிணைந்த பண் ணையில் பயன்தரும் மரக்கன் றுகள் அதிதிகளினால் நாட்டி வைக்கப்பட்டன. (ஐ)

# பஸ் குடைசாய்ந்து விபத்து; சிறுவன் உட்பட 6 பேர் காயம்!

திருகோணமலை, பெப். 26
சேருநுவர பகுதியில் பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத் துக்கு உள்ளானதில் ஆறு பேர் காயமடைந்த நிலையில் கந்த ளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குருநாகலிலிருந்து திருகோணமலைக்கு சென்ற சுற்றுலா பயணிகள் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளா னது.

குருநாகல் மற்றும் நாரம்பல பகுதியைச் சேர்ந்த மூன்று பெண்களும், இரண்டு ஆண்களும், ஒரு சிறுவனுமே காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குருணாகலிலிருந்து திரு கோணமலை சேருவில விகா ரையை பார்வையிட்டு திரும் பியபோதே பஸ் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. (ஐ)

# 33 பொது இடங்களில் ரஷ்யா குண்டுவீச்சு!

கீவ், பெப். 26

நேற்று மதியம் வரையான 24 மணிநேரத்தில் ரஷ்யப் படைகள் 33இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கூடுமிடங்களில் குண்டுவீச்சு தாக்குதல்களை நடத்தியுள்ளது என்று உக்ரைன் உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"ரஷ்ய படைகள் பொதுமக்கள், பொது இடங்களை தாக்க வில்லை என்று கூறுகிறார்கள். ஆனால், கடந்த 24 மணி நேரத் தில் பொது மக்கள் கூடியிருந்த 33 இடங்கள் தாக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, ரஷ்யப் படைகளை எதிர்த்துப் போரிட அனைவரையும் அணி திரளுமாறு அந்த நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)



# உக்ரைன் போருக்கு எதிர்ப்பு; ரஷ்யாவில் 1600 பேர் கைது!

மொஸ்கோ, பெப். 26

உக்ரைன்மீதான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யா வின் பல நகரங்களில் நேற்று முன்தினம் போராட்டங்கள் இடம்பெற்றன.

இந்தப் போராட்டங்களில் ஈடுபட்ட 1,600இற்கும் மேற் பட்டவர்கள் ரஷ்ய பொலிஸ ரால் கைது செய்யப்பட்டனர்.

தலைநகர் மொஸ்கோ மற் றும் சென். பீற்றர்ஸ்பேர்க், யெகாடெரின்பேர்க் உள்ளிட்ட 53 நகரங்களில் நடந்த பேரணி களில் பல நூற்றுக்கணக்கான ரஷ்யர்கள் திரண்டு போருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி விளாடிமிர் புடின் வியாழன் உக்ரைன் மீது படையெடுப்பைத் தொடங்கிய பின்னர், ரஷ்ய பொப் நட்சத்தி ரங்கள், பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நகைச்சுவை நடிகர் மற்றும் ஓர் உதைபந் தாட்ட வீரர் எனப் பலர் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டனர்.

இந்நிலையில் 53 நகரங்களில் நடந்த பேரணிகளில் ஈடுபட்ட 1,667 பேரை கைது செய்து பொலிஸார் தடுத்து வைத்துள் ளனர் என்று ரஷ்யாவில் உள்ள தகவல் உரிமை கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட ரஷ்ய அரசின் விமர்சகர் அலெக்ஸி நவல்னியின் ஆதரவாளர்களின் போராட்டங் களை ஒடுக்கிய பின்னர், மிகப் பெருமளவில் ரஷ்யாவில் நடை பெற்ற அரச எதிர்ப்பு போராட் டமாக இது அமைந்திருந்தது.

மொஸ்கோ, சென். பீற்றர்ஸ் பேர்க் மற்றும் யெகாடெரின் பேர்க் உள்ளிட்ட நகரங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் "போர் வேண்டாம்!" என்றவாறான முழக்கங்களை எழுப்பினர்.

மொஸ்கோவில் மட்டும் போருக்கு எதிர்ப்புத் தெரி வித்து போராட்டத்தில் ஈடு பட்ட 600 பேரை கைது தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கொவிட் தொற்றுநோயைக் காரணம் காட்டி தலைநகரில் போராட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உக்ரைனுக்கு எதிரான மொஸ்கோவின் பெரும் இராணுவ நடவடிக்கையைப் பற்றி தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் என ரஷ்யா வின் தொலைத் தொடர்பு கட் டுப்பாட்டு அமைப்பு நேற்று வியாழக்கிழமை ஊடக நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுத்தது. அத்துடன், ரஷ்ய அதிகாரபூர்வ ஆதாரங்களில் இருந்து வரும் தகவல்கள் மட் டுமே நம்பகமானவை. தவறான தகவல்களை பரப்பு வதை ஊட கங்கள் நிறுத்த வேண்டும் என் றும் அரசு எச்சரித்துள்ளது. (ஐ)



உக்ரைனிலிருந்து பாதுகாப்பான இடத்துக்கு தப்பிச் செல்வதற்காக ரயில்நிலையத்தில் காத்திருக்கும் குடும்பம் ஒன்று...!

# தலைநகருக்குள் புகுந்தது ரஷ்ய படை; பலமுனைகளில் தொடரும் தாக்குதல்!

## ■ செர்னோபில் நகரம் வீழ்ந்தது
## ■ அயல் நாடுகளில் மக்கள் தஞ்சம்

கீவ், பெப். 26

உக்ரைனின் தலைநகராக கீவுக்குள் ரஷ்யா படைகள் நேற்று மதியத்தின் பின்னர் நுழைந்துள்ளன. எனினும், உக்ரைன் படையினர் கடுமை யான தாக்குதல்களை தொடர்ந்து அங்கு நடத்தி வருகின்றன.

உக்ரைன் இராணுவத்தின் சீருடைகளுடன் ரஷ்யப் படை கள் நுழைந்துள்ளன என்றும் விரைவில் முழுமையாக கீவ் நகரை ரஷ்ய படைகள் தம் வசமாக்கும் என்றும் கூறப்படு கின்றது.

போரின் முதல்நாளான நேற்றுமுன்தினம், உக்ரைனின் நகரங்கள் மீதும் இராணுவத் தளங்கள் மீதும் பரவலான - தொடர்ச்சியான ஏவுகணை தாக்குதல்களையும் போர் விமா னங்கள் மூலம் குண்டுவீச்சு தாக் குதல்களையும் ரஷ்யா நடத்தி யது. இதைத் தொடர்ந்து டாங்கிகள் உக்ரைன் எல்லைக் குள் நுழைந்தன.

நேற்று அதிகாலை முதல் தலைநகர் கீவின் கிழக்கு, வடக்கு தெற்கு திசைகளில் இருந்தும் தரை, நீர், ஆகாய வழிகளிலும் ரஷ்யா தாக்குதல் களை நடத்தி வருகின்றது. இதனிடையே கீவின் புறநகர் பகுதியிலுள்ள விமானத் தளம் ஒன்றை கைப்பற்றும் முனைப்பி லும் ரஷ்யா ஈடுபட்டுள்ளது.

இதேநேரம், உக்ரைன் நடத் திய பதில் தாக்குதல்களில் ரஷ் யாவின் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. அத்துடன், தங்கள் தரப்பில் பொதுமக்கள் - படையினர் என 137 பேர் உயிரி ழந்தனர் என்றும் அந்த நாடு உறுதிப்படுத்தியது.

சோவியத் ரஷ்யாவுக்குள் உக்ரைன் இருந்த காலத்தில் அணு உலை விபத்து இடம்





பெற்ற நகரமான செர்னோபிலை ரஷ்யா முழுமையாக கைப்பற் றியுள்ளது. இதனை உக்ரைன் ஜனாதிபதியின் ஆலோசகராக மைக்கெலோ போடோலியாக் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த நகரை கட்டுப்பாட்டுக் குள் வைத்திருக்க ரஷ்யா அதி களவு படைகளை அங்கு குவித்து வருகின்றது என்று மேற்கத் தைய உளவு நிறுவனங்களின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, உக்ரைன் பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கில் இடம்பெயர்ந்து அயல்நாடுகளான மால்டோவா, ரொமேனியா, போலந்து, ஹங் கேரி போன்ற நாடுகளுக்கு தப்பிச் சென்று வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் மதிப் பீட்டின்படி ஒரு இலட்சத்துக் கும் மேற்பட்டவர்கள் நாட்டை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேபோன்று இடம்பெயர் வதற்காகவும் பாதுகாப்புக்காக வும் ரயில் நிலையங்கள், பாதாள தளங்கள், வெடிகுண்டு பாதுகாப்பு தளங்களில் அடைக் கலம் புகுந்துள்ளனர்.

இதனிடையே, வான்வழி தாக்குதல்களை எச்சரிக்கும் "சைரன்" ஒலிகள் தொடர்ச் சியாக தலைநகர் முழுவதும் ஒலித்த வண்ணமுள்ளன.

போர் தொடங்கியதிலிருந்து ரஷ்யா 450 படையினரை இழந் துள்ளது என்று இங்கிலாந்து மதிப்பிட்டுள்ளதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் பென் வோலஸ் தெரிவித்தார்.

# போரை நிறுத்துவதற்கு ரஷ்யா பேச வேண்டும்!

## உக்ரைன் ஜனாதிபதி உரை

கீவ், பெப். 26

"விரோதத்தை எப்படி முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் இந்த படையெடுப்பை நிறுத்துவது பற்றி ரஷ்யா விரைவில் அல்லது பின்னர் எங்களுடன் பேச வேண்டும்", என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்கஸ்கி தெரிவித்துள்ளார்.

அத்துடன், உதவி கேட்டு நேட்டோ உள்ளிட்ட 27 நாடுகளை நாடியுள்ளேன். ஆனால், உதவிக்கு யாரும் வர வில்லை. பல நாடுகளின் தலை வர்களை நேரடியாகக் கேட்டு விட்டேன். அவர்கள் ரஷ்யா வுக்கு அஞ்சுகிறார்கள். ஆனால், உக்ரைன் யாருக்கும் அஞ்ச



வில்லை என்றும் கூறினார்.

நேற்று அதிகாலை ரஷ்யா கடுமையான தாக்குதல்களை உக்ரைன் மீது தொடங்கிய நிலையில், நாட்டு மக்களுக்கு காணொலி வாயிலாக ஜனா திபதி உரையாற்றினார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா மொழிகளில் போரை முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என்று அவர் ரஷ்யாவை கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்தும், "எந்தளவுக்கு உரையாடல் விரைவில் தொடங்குகிறதோ, அந்தளவுக்கு ரஷ்யாவின் இழப்புகள் சிறியதாக இருக்கும்" என அவர் கூறினார்.

தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை, "நம் நாட்டை காப் போம்" எனவும் அவர் தெரிவித் தார். அத்துடன், ரஷ்யாவின் முதல் இலக்கு தானே என்றும் . தலைநகரை விட்டு வெளியே றும் எண்ணம் தனக்கு இல்லை எனவும், தனது குடும்பமும் உக்ரைனிலேயே இருக்கும் என்றும் அவர் மேலும் கூறி னார். (ஐ)



## கட்டார் ஓப்பன் ரென்னிஸ் சானியா இணை தோல்வி!

டோஹா, பெப். 26

கட்டார் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவின் அரையிறுதியில் சானியா இணை தோல்விய டைந்தது.

கட்டாரின் தலைநகர் டோஹாவில் பெண்களுக்கான டபிள்யூ. ரி. ஏ., ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில், பெண்கள் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா, செக் குடியரசின் லூாசியே ஜோடி, செக் குடியரசின் கிரெஜ்சிகோவா, சினியகோவா இணையை சந்தித்தது. இதில் சானியா இணை 7-6, 4-3 என முன்னிலையில் இருந்த போது, செக் குடியரசு இணை விலகிக் கொள்வதாக அறிவித்தது.

சானியா இணை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட, அரையிறுதிக்குள் நுழைந்தது. இதில் பெல்ஜியத்தில் மெர்டென்ஸ், ரஷ்யாவின் குடர்மோவா ஜோடியை சந்தித்தது. முதல் செற்றை 0-6 என இழந்த சானியா இணை அடுத்த செற்றை 3-6 என இழந்தது. முடிவில் சானியா ஜோடி 6-0, 3-6 என்ற நேர் செற் கணக்கில் தோல்வியடைந்தது.

# இந்தியாவுடனான ரி-20; இலங்கை படுதோல்வி!

லக்னோ, பெப். 26

இலங்கை - இந்திய அணிகள் லக்னோவில் மோதிய முதல் இருபது - 20 போட்டியில் 62 ஓட்டங்களால் இந்தியா இலகு வெற்றி பெற்றது.

இஷான் கிஷன், ஷ்ரேயாஸ் ஐயர் ஆகிய இருவரும் குவித்த அதிரடி அரைச்சதங்கள் இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்டிருந்தன.

இந்த வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக்கெட் தொடரில் 1 - 0 என்ற கணக்கில் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 199 ஓட்டங்களைக் குவித்தது.

அணித் தலைவர் ரோஹித் ஷர்மாவும் இஷான் கிஷானும் 71 பந்துகளில் 111 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்தியாவுக்கு சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர். ரோஹித் ஷர்மா 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் இஷான் கிஷனும் ஷ்ரேயாஸ் ஐயரும் அதிரடி வேகத்தில் ஓட்டங்களைக் குவித்தனர்.

இஷான் கிஷன் 56 பந்துகளை எதிர்கொண்டு 10 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 89 ஓட்டங்களையும் ஷ்ரேயாஸ் ஐயர் 28 பந்துகளை எதிர்கொண்டு 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் குவித்தனர்.



இவர்கள் இருவரும் 2ஆவது விக்கெட்டில் 44 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். தொடர்ந்து ரவீந்திர ஜடேஜாவுடன் பிரிக்கப்படாத 3ஆவது விக்கெட்டிலும் ஷ்ரேயாஸ் ஐயர் 44 ஓட்டங்களைப் பகிர்ந்தார். ஜடேஜா 3 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

பந்துவீச்சில் லஹிரு குமார, தசுன் ஷானக்க ஆகிய இருவரும் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இலங்கையின் பந்துவீச்சில் லஹிரு குமார, தசூன் சானக ஆகிய இருவரும் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

கடின இலக்கான 200 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 137 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

புவ்னேஷ்வர் குமார் வீசிய முதல் பந்திலேயே பத்தும் நிசங்க ஆட்டமிழந்ததுடன் இலங்கையின் துடுப்பாட்டம் சரிவு காணத் தொடங்கியது. தொடர்ந்து கமில் மிஷார (13), ஜனித் லியனகே (11), தினேஷ் சந்திமால் (10), தசூன் சானக (3) ஆகியோர் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்தனர்.

எனினும் சரித் அசலங்க, சாமிக கருணாரட்ன, துஷ்மந்த சாமீர ஆகிய மூவரும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி இலங்கை 100 ஓட்டங்களைக் கடக்க உதவினர்.

சரித் அசலங்க 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருக்க, 6ஆவது விக்கெட்டாக சாமிக கருணாரட்ண 21 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். அடுத்து வந்த துஷ்மந்த சாமீர 14 பந்துகளில் 24 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

இந்திய பந்துவீச்சில் புவனேஷ்வர் குமார் 2 விக்கெட்களையும் வெங்கடேஷ் ஐயர் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



## இந்தியாவுடனான தொடர் விலகினார் மகேஷ் தீக்ஷன

கொழும்பு, பெப். 26

இந்தியாவுக்கு எதிரான இருபதுக்கு - 20 தொடரில் இருந்து இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் மகேஷ் தீக்ஷன விலகியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஆஸி அணிக்கு எதிரான இருபது - 20 தொடரில் மகேஷ் தீக்ஷனவுக்கு தொடைப் பகுதியில் உபாதை ஏற்பட்டது. பரிசோதனையின் பின்னர் இந்திய தொடரில் அவர் இடம்பெறுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அவருக்கு காயம் ஏற்பட்டிருப்பதால் அவர் இந்தியாவுக்கு எதிரான தொடரில் பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - இலங்கை அணிகள் மோதும் போட்டி இன்று சனிக்கிழமை தர்மசாலாவில் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. பி. எல். ரி - 20 தொடர் மார்ச் 26இல் ஆரம்பம்!

ஐ. பி. எல். இருபது - 20 போட்டியின் 15ஆவது தொடர் மார்ச் 26ஆம் திகதி தொடங்கி, மே 29ஆம் திகதி நிறைவடைகிறது.

ஐ. பி. எல். நிர்வாகக் குழு கூட்டத்துக்குப் பிறகு இதை தெரிவித்த ஐ. பி. எல். தலைவர் பிரிஜேஷ்

பட்டேல், மும்பை, நவி மும்பை, புனே ஆகிய 3 இடங்களில் உள்ள மைதானங்களில் ஆட்டங்கள் நடைபெறும் என்று தெரிவித்தார்.

லீக் ஆட்டங்கள் இங்கு நடைபெறும் நிலையில் பிளே ஓவ் ஆட்டங்கள்

நடைபெறும் இடங்கள் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இறுதி ஆட்டம் அஹமதாபாதில் நடைபெறும் எனத் தெரிகிறது.

தொடக்க நிலையில் 40 சதவீதம் அளவுக்கு மைதானத்தில் ரசிகர்களை அனுமதிக்க முடிவு செய்திருப்பதாகவும், கொரோனா சூழல் மட்டுப் படும் பட்சத்தில் மைதானத்தின் முழு கொள்ளளவுக்கும் ரசிகர்களை அனுமதிக்க பரிசீலிக்கப்படும் என்றும் பிரிஜேஷ் பட்டேல் கூறினார்.

லீக் ஆட்டங்களில் மும்பையின் வான்கடே மற்றும் நவி மும்பையின் டிஓய் பாட்டில் மைதானங்களில் தலா 20 ஆட்டங்கள், மும்பையின் பிராபோர்ன் மற்றும் புனேவின் கஹூஞ்ஜே மைதானங்களில் தலா 15 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. (ஐ)





## கட்டார் ஓப்பன் ரென்னிஸ் ஒஸ்ராபென்கோ வெற்றி!

டோஹா, பெப். 26

கட்டார் ஓப்பனில் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான முகுருஷாவை ஒஸ்ராபென்கோ வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.


கட்டாரின் தலைநகர் டோஹாவில் பெண்களுக்கான டபிள்யூ. ரி. ஏ., ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

லாத்வியாவின் ஒஸ்ட்ராபென்கோ ஸ்பெயினின் முருகுஷாவை எதிர்கொண்டார். இதில் ஒஸ்ட்ராபென்கோ 6 - 2, 6 - 2 என்ற செற்கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று அரையிறுதிக்கு நுழைந்தார்.

இதுபோல, மற்றைய காலிறுதிப் போட்டிகளில் இகா ஸ்வியாரெக், கொன்ராவெய்ட், மரியா சக்காரி ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு நுழைந்தனர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 07 - 1944



மறைவு 08 - 03 - 2021

### அமரர் ஆறுமுகசாமி நாகேந்திரா

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - அநுராதபுரம், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கல்வி திணைக்களம்)

**திதி: மாசி மாத அபரபக்ச ஏகாதசி**

ஆண்டு ஒன்றானாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலவில்லை
ஆறுமோ எம்மனம் அவனியிலே
குடும்ப குலவிளக்காய் விளங்கிய
எங்கள் அன்பு தெய்வமே
அன்பு நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
வரிசைப்புலம் மகாமாரி அம்மன்,
பூந்தோட்ட ஞானவைரவரை பிரார்த்திக்கிறோம்.

இல. 20,"காமாட்சி இல்லம்"
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல் :
**குடும்பத்தினர்.**
**தொடர்புகளுக்கு:**
**0212240384**

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 - 11 - 1930



மறைவு 22 - 02 - 2022

### Dr.பரமநாதன் விக்னேஷ்வரா

நீராவியடி பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும், சுன்னாகம் புகழ் Dr.பரமநாதன் விக்னேஷ்வரா 22.2.22 சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன் தங்கரத்தினத்தின் அன்பு மகனும், தர்மலிங்கம் மனோன்மணியின் மருமகனும், பாசமிகு விமலாதேவியின் கணவரும், அருணா, குமாரராஜன், அமுதன், ஐங்கரன், அகிலா, அரவிந்தன் ஆகியோரின் அன்பு அப்பாவும் நந்தகோபாலன், சுகன்யா, பத்மாவதி, கஜந்தி, வதனன் ஆகியோரின் மாமனாரும், துளசி, அஞ்சன், அபிஷேக், கவியரன், சாலினி, யாழினி, விஷ்வன், யதுஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற ஆனந்தநாயகி - திருஞானசோதி,காலஞ்சென்ற கனகேஸ்வரி- இராஜலிங்கம ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஞானாம்பிகை, சிவஞானசம்பந்தன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் பெப்ரவரி 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை Magnolia chapel Macquarie Park Cemetery and Crematorium இல் காலை 11:00 முதல் 2:00 மணி வரை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**குமாரராஜன்: 0402 874 156**
**அமுதன்: 0420 455 363**
**ஐங்கரன்: 0413459842**
**அரவிந்தன்: 0413 193 001**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்கு சிங்களவர் போடும் சதிக்கு நம்மவர்கள் சிலரும் துணை!

## ஜனநாயகப் போராளிகள் கட்சி குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், பெப். 26**

**தமிழ்த் தேசியத்தை முற்றாக அழிப்பதற்கு சிங்களம் போடும் சதிக்கு நம்மவர்கள் சிலர் துணையாக நிற்கின்றார்கள் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.**

சமகால அரசியல் நிலைமை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலில் பயணிக்கும் கட்சிகள் தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுத்ததில்லை.

மாறாக ஒன்றிணைந்திருந்த கட்சிகள் பிரிந்து சென்று தனித்தனியே தங்களின் சுயநல அரசியலை முன்னெடுத்தது தான்நிலைமையாகக் காணப்பட்டது.

ஒரு நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் எங்கள் ஆறு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் ஆராய்ந்து அந்த விடயத்தை வென்றெடுப்பதற்கான ஆரம்பகட்ட நிகழ்ச்சித் திட்டமாக வரைவைத் தயாரித்து இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றன.

13ஆவது திருத்தச் சட்டம், அரசியற் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம் மற்றும் இவற்றுக்கெல்லாம் இந்தியாவின் ஒத்துழைப்பு போன்றன தொடர்பாக இவ்வரைபில் குறிப்பிடப்பட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அறிகின்றோம்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு தமிழர்களின் ஆயுதப் பலம் சிதைக்கப்பட்டது. ஆனால் தமிழர்களின் தேசியக் கோட்பாடு என்பது என்றும் அழிக்கப்பட முடியாத ஒரு விடயமாக இருக்கின்றது.

யுத்தம் முடிவுற்றதும் அரசாங்கமானது மிக இராஜதந்திரமான முறையில் தமிழ்த் தேசியத்தையும், தமிழ் மக்களின் இருப்பையும் சிதைப்பதற்குப் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவும், இந்தியாவின் அனுசரணையைக் கோரிய வேண்டுகோளும் பேரினவாத அரசாங்கத்துக்கு ஒரு பேரிடியை ஏற்படுத்தியிருக்கின்றது.

தென்னிலங்கையில் இருக்கின்ற இனவாதக் கட்சிகளும், ஜனநாயகக் கட்சிகளும் ஒரு பயத்தில் திளைத்துள்ளார்கள்.

இவ்வாறு ஒற்றுமையான பயணம் ஆரம்பிப்பதற்கு முன்னரே சில தமிழ் விரோதக் கட்சிகள் என்று சொல்லப்படவேண்டிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி இலங்கை அரசாங்கத்தின் திட்டங்களுக்கு அமைவாக இந்த முயற்சிகளைக் குழப்புவதற்கும், முறியடிப்பதற்கும் முயற்சிக்கின்றது. உண்மையில் எமது மக்கள் தெளிவாக நிதானமாக புரிதலுடன் இருக்க வேண்டும்.

ஆயுதப் போராட்டம் மிக உச்ச கட்டத்தைத் தொட்ட காலத்தில் அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போராட்டத்திற்கு எந்தவகையிலும் ஒத்துழைப்பு வழங்காத இந்தக் கட்சியானது வடக்கு-கிழக்கில் தமிழர்கள் ஆட்சி செய்வதற்கு இருக்கின்ற அதிகாரங்களைக் கூட இல்லாமல் செய்வதற்கு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இது உண்மையில் இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற விடயம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் இவர்களுடைய செயல்பாடுகளுக்கும், இலங்கை அரச பயங்கரவாதத்தின் செயற்பாடுகளுக்கும் எவ்வித வேறுபாடுகளும் காணப்படவில்லை.

காலம் காலமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த இந்த தாயகப் பூமியை குறைந்தபட்ச அதிகாரத்துடனாவது நிருவாக ரீதியில் நாமே ஆட்சி செய்யக் கூடிய விதத்தில் அமைந்துள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். என்பதில் எங்களது தமிழ் அரசியற் கட்சிகள் முனைப்பாக இருக்கின்றன.

ஆனால், இந்த 13வது திருத்தச் சட்டத்தை ஒரு நிரந்தரத் தீர்வாக அக்கட்சிகள் ஏற்றுக் கொண்டுவிட்டதாகப் பொய்யான பரப்புரையை மக்கள் மத்தியில் பரப்பி 13 ஐ இல்லாதொழித்து தமிழ்த் தேசியத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் வடிவத்தை இல்லாதொழிப்பதன் மூலம் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியத்தை முற்றாக அழிப்பதற்கு சிங்களம் போடும் சதிக்கு இவர்கள் துணையாக நிற்கின்றார்கள்.

எமது ஆயுதப் போராட்ட அமைப்பானது மிகப் பெரிய சாம்ராச்சியம். மக்களின் விடுதலைக்காக போராடிய அனைவரும் உயர்ந்தவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களது செயற்பாடுகளையும் தியாகங்களையும், சுயநல சந்தர்ப்பவாத அரசியலுக்காக பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மிகவும் போலியான கட்சியாகவே இருக்கின்றது. இவர்களுக்கு புலம்பெயர் நாடுகளில் வாழும் இவர்களது முகவர்கள் பாரிய நிதியை வழங்குகின்றார்கள். போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு சென்றடையவேண்டிய நிதிகள் அனைத்துமே இவர்களது சந்தர்ப்பவாத அரசியலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

புலம்பெயர் நாடுகளில் வாழும் எமது மக்கள் தங்களின் மனச்சாட்சியின் படி இவற்றைச் சிந்திக்க வேண்டும். எமது மாவீரர்களின் பெற்றோர்கள் இந்த மண்ணிலே மிகவும் வறுமையான நிலையில் வாழுகின்றார்கள்.

போராளிகளின் பிள்ளைகள் கல்வியை முன்னெடுக்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள். இவ்வாறு எமது மக்கள் வாழுகின்ற போது அவர்களுக்குக் கரம் கொடுத்து அவர்களது வாழ்வியலை உயர்த்தாது இந்த சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு நிதிகளை வழங்கி தமிழ்த் தேசியத்தின் இருப்பை அழிப்பதற்கு முன்னோடியாகச் செயற்படுகின்றீர்கள்.

ஆனாலும், எமது புலம்பெயர்ந்து வாழுகின்ற உறவுகள் பலர் இன்றும் எமது மக்களுக்கான உதவிகளைச் செய்து அவர்களை கௌரவமாக வாழ வைக்கின்ற செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள் அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஒரு மறவனின் தலைமையின் கீழ் ஒன்றாக இருந்த நாங்கள் தற்போது பல கூறுகளாகப் பிரிந்து ஒவ்வொரு கட்சிகளாக உடைந்து நிற்கின்றோம். இது எதிர்காலத்தில் எமக்கு நன்மையைத் தரப்போவதில்லை.

தற்போது இராஜதந்திர ரீதியாக எமக்கான ஒரு தளத்தை நிலைநிறுத்திக் கொண்டு அதில் நின்று மிகப் பலமாக எமது அரசியல் மற்றும் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க அனைவரும் ஒன்றுதிரண்டு செயற்படவேண்டும்-என்றார். (அ)

# வார இறுதியில் இரவு வேளையில் மின்வெட்டை தவிர்க்கவேண்டும்

## பொது பயன்பாட்டு ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, பெப். 26

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் அண்மைய மின்வெட்டுகளின் காரணமாக நுகர்வோர் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

இதனால் இவ்வார இறுதியில், இரவு வேளைகளில் மின்வெட்டை தவிர்க்குமாறு அல்லது குறைந்தபட்ச மின்வெட்டையேனும் விதிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க இதனை தெரிவித்தார். (அ)

## ரஷ்ய தூதரகம்...

முன்னெடுத்தனர்.

தூதரகத்திற்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்ட உக்ரைன் பிரஜைகள், 'ரஷ்ய ஆக்கிரமிப்பை நிறுத்து', 'போரை நிறுத்து' மற்றும் 'ரஷ்யா வீட்டிற்கு செல்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியபடி ரஷ்யா தொடங்கிய முழு அளவிலான போர் இராணுவம் மற்றும் பொதுமக்களிடையே உயிரிழப்புகளை ஏற்படுத்தியதாக கோசமெழுப்பினர்.

தங்கள் குரலை உலகம் கேட்க வேண்டும் என்றும் உக்ரேனிய பிரஜைகள் இதன்போது தெரிவித்தனர்.

அமைதியான உக்ரேனிய நகரங்கள் மற்றும் கிராமங்கள் இரவும் பகலும் இடைவிடாது தாக்குதலுக்கு உள்ளாகுகின்றன என்றும் இலங்கையில் வசிக்கும் உக்ரேனியர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ரஷ்ய துருப்புக்கள் உக்ரேனிய எல்லைக்குள் சட்டவிரோதமாக வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கிலிருந்து எல்லையை கடந்து செல்கின்றன என்றும் உலகம் ரஷ்யாவை தீர்க்கமாக தடுக்க முடியும் என்றும் தெரிவித்துள்ள அவர்கள், இது சர்வதேசத்தின் நேரம் என்றும் இதனை தடுக்க உலக நாடுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு, ரஷ்யாவுக்கு எதிரான கடுமையான பொருளாதாரத் தடைகள் மற்றும் போரை நிறுத்த அனைவருக்கும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். (அ)

## பயங்கரவாத...

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் பகுதிகளில் இதற்கு ஆதரவு கிடைத்திருந்தது.

இந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் நீர்கொழும்பு பஸ் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் சிவில் சமூக பிரதிநிதிகள் பலரும் கொண்டனர்.

குறிப்பாக சிங்கள மக்கள் அதிகளவில் ஒன்றுகூடி பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தும் ஆவணத்தில் கையொப்பமிட்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன், "இன்றைய நாள் எமக்கு மிகுந்த மகிழ்ச்சியான நாள். காரணம் சிங்கள மக்களும் அதிகளவில் ஒன்று கூடி பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி கையொப்பமிட்டுள்ளனர்." எனக் குறிப்பிட்டார். (அ)

## சர்வதேசத்தை...

இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை நூற்றுக்கணக்கான அப்பாவி உயிர்கள் மீதான தாக்குதல் தொடர்பான நேர்மையான விசாரணைகளை மேற்கொள்ளவும், பொறுப்பானவர்களை நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவருமாறும் அறிக்கை மூலம் தெரிவித்தது.

ஆனால், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கமும் சட்டமா அதிபர் திணைக்களமும் தவறிவிட்டன. இது தொடர்பில் தாம் அதிர்ச்சி அடைவதாக இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

தாதமம் மட்டுமின்றி உண்மையை மறைக்கவும், படுகொலையை அரசிஙல் ஆதாயத்திற்காக பயன்படுத்தவும், பிரச்னைகளை சிக்கலாக்கும் முயற்சிகளும் நடப்பதாகத் தோன்றுவதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க சர்வதேச உதவியை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

முன்னதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளியிட்ட கருத்துக்களின் அவசியத்தை மீண்டும் தாம் வலியுறுத்துவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

## இலங்கை மீது...

இந்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க தேவையில்லை.

அரசாங்கத்தால் ஆற்றப்படும் நல்ல விடயங்களை ஏற்று அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதையே அவர்கள் செய்ய வேண்டும்.

யுத்தம் காரணமாக, மாதமொன்றுக்கு அனைத்து இனங்களையும் சேர்ந்த சுமார் 250 உயிர்கள் காவுகொல்லப்பட்டன. ஆனால், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியின் பின்னர் ஈஸ்டர் தாக்கு தலைத் தவிர்த்து உயிரிழப்புகள் இடம்பெற்ற சந்தர்ப்பம் பூச்சியமாகும்.

மனித உரிமைகள் குறித்து பேசுவதற்கு முன்னர், மனிதன் ஒருவன் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது முக்கியமாகும்.

இலங்கை மீது குற்றம் சுமத்தும் நாடுகளின் கடந்த இரண்டு தசாப்தகாலச் செயற்பாடுகளைப் பார்த்தால், அவை மனித உரிமைகளை மீறி, வேறு நாடுகளை ஆக்கிரமித்து அந்த நாடுகளில் பெருமளவான உயிரிழப்புகளை ஏற்படுத்திய பல சந்தர்ப்பங்களைக் குறிப்பிட முடியும்-என்றார். (அ)

## பழைய...

சார முறைமையின் கீழ் 40 சதவீதமும் இணைந்த கலப்பு தேர்தல் முறைமைக்கு ஏற்ப நடத்தப்பட வேண்டுமெனவும், புதிய முறைமை கொண்டுவரப்படும் வரையில், பழைய முறைப்படியே தேர்தல் நடத்தப்படவேண்மென்றும் இணக்கம் காணப்பட்டதாக அக்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பான பாராளுன்ற தெரிவுக்குழு கூட்டத்தின்போது, இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த தெரிவுக்குழு எதிர்வரும் மார்ச் முதலாவது வாரத்தில் மீண்டும் கூடவுள்ளது.

இதேவேளை, அனைத்து தேர்தல்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக இருக்க பரிந்துரைப்பது மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்குதல் என்ற முன்மொழிவுக்கும் இதன்போது கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது. (அ)

## மின் கட்டணம்...

மேலும் சுட்டிக்காட்டி னார்.

இது தொடர்பில் மக்களின் கருத்துகளை சேகரித்து சகல தரப்பினரிதும் நிலைப்பாடுகளை பெற்றுக்கொள்ள பொது பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அதன் பின்னர் மின் கட்டணத்தை அதிகரிப்பதா அல்லது நிவாரணம் வழங்குவதா என்பது தொடர்பில் அரசாங்கத்திடம் யோசனை கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் தீர்மானத்துக்கமைய இறுதி முடிவுகள் எடுக்கப்படுமென அவர் மேலும் கூறினார். (அ)

## இன்று...

அதற்கமைய, இன்று சனிக்கிழமை ஏ,பி மற்றும் சி ஆகிய பிரிவுகளுக்கு 3 மணிநேர மின்வெட்டையும், ஏனைய பிரிவுகளுக்கு 2.30 மணிநேர மின் வெட்டையும் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# பயங்கரவாத சட்ட திருத்தம் பாராளுமன்றில் விவாதம்!

### பிரான்ஸ் செனட்டர்களுக்கு பீரிஸ் உதவி

கொழும்பு, பெப். 26

பயங்கரவாத தடைச் சட்டத்தில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மார்ச் முதல் வாரத்தில் இது குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பிரெஞ்சுக் குடியரசின் செனட்டில் இடம்பெற்ற பிரான்ஸ் - இலங்கை நட்புறவுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடனான காலை உணவு சந்திப்பில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு இலங்கையின் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கும் போதே பீரிஸ் இவ்வாறு கூறினார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி 16 இலக்குகள் பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை போன்ற உள்நாட்டு பொறிமுறைகளின் முன்முயற்சிகள் குறித்து அவர் கருத்துத் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய நீதியரசர் ஒருவரின் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை தற்போது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் நீண்டகால நடவடிக்கையை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவொன்று தமது பணியை நிறைவு செய்யவுள்ளதுடன், அவர்களது அறிக்கை முன்கூட்டியே சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட 42 வருடகால பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கு அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மார்ச் முதல் வாரத்தில் விவாதிக்கப்படவிருப்பதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்காக ஜெனீவா செல்லவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அண்மைக்காலத்தில் இலங்கை மேற்கொண்ட கணிசமான நடவடிக்கைகள் தொடர்பில் பிரான்ஸ் குடியரசின் புரிதலை எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

# சுகதேகிகளாக சமூகத்தில் நடமாடும் தொற்றாளர்கள்!

### மருத்துவர் ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 26

கோவிட் தொற்றை சாதாரணமானதாக கருதுவது புத்திசாலித்தனமானதல்ல என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கோவிட் பரிசோதனைகளை மேற்கொள்ளாத பல தொற்றாளர்கள் இன்னும் சமூகத்தில் இருப்பதாக வும், அவர்களுக்கு எவ்வித கோவிட் அறிகுறிகளும் வெளிப்படுத்தப்படாமல் சுகதேகிகளை போன்று காணப்படுவதாகவும் வைத்தி யர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார்.

அத்துடன், பூரண தடுப்பூசியேற்றம் மற்றும் முறையாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றல் என்பன கோவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பைபெறக் கூடிய ஆகச் சிறந்த வழிமுறைகளாகுமென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார். (அ)

# பஸிலின் இந்திய பயணம் இறுதி நேரம் ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 26

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சரும், அவரின் செயலாளர் ஆட்டிகலவும் நேற்று டில்லி செல்லவிருந்தனர். எனினும், இப்பணம் பிற் போடப்பட்டுள்ளது என நேற்று முன்தினம் மாலை திடீரென அறிவிப்பு வெளியானது.

இந்தியாவிடமிருந்து பெறப்படவுள்ள கடன் தொடர்பான உடன்படிக்கையை இறுதிப்படுத்தும் நோக்கிலேயே நிதி அமைச்சர் பஸில் அங்கு செல்லவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ்மா அதிபருக்கு கொரோனா

கொழும்பு, பெப். 26

பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்ரமரத்னவுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் செய்துகொண்ட பரிசோதனையின் பின்னர் அவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக அவர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பரிசோதனை செய்துகொள்வதற்கு முன்னர், பொலிஸ் மா அதிபர், பொலிஸ் தலைமையகத்தில் உள்ள தனது அலுவலகத்துக்கு சென்று, சில பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் என தெரியவருகிறது. (அ)

## ரஞ்சனுக்காக...

திகதி ஜெனிவாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் 28 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அதற்கு சமாந்தரமாக உப மாநாடுகளும் நடைபெறும். அவ்வாறானதொரு மாநாட்டில் பங்கேற்று, ரஞ்சன் தொடர்பில் முறையிடவே அவர் ஜெனிவா செல்லவுள்ளார்.

ஹரீனுடன் அநேகமாக பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவும் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## கொரோனாவால்...

களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங் களின் மொத்த எண்ணிக்கை 16 142ஆக அதிகரித்துள்ளது. (அ)

# மூன்று மாதங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருள் கையிருப்பில்

## அமைச்சர் பஸில் கூறுகிறார்



**கொழும்பு, பெப். 26**

**மூன்று மாதங்களுக்கு தேவையான அத்தியா வசிய பொருட்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை சுங்கத் திணைக்களத்தின் விவரங்களுக்கு அமைய தெரிய வந்துள்ளதாக நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

எனினும் பல்வேறு பிரதேசங்களுக்கு பொருட்களை விநியோகித்தமைக்கான தரவு விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை எனவும் மூன்று மாதங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் சந்தை யில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

சில இடங்களில் கிடைக்கும் பொருட்கள் பல காரணங்களின் அடிப்படையில் வேறு இடங்களில் கிடைப்பதில்லை எனவும் நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே அவர் இதனை கூறினார்.

சில பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்தாலோ அல்லது விற்பனை நிபந்தனை போன்ற தேவையற்ற பிரயோசனங்களைப் பெற வர்த்தகர்கள் முயற்சித்தால், அப்படியானவர்கள் சட்டத்துக்கு முன் கொண்டு செல்லப்படுவார்கள் எனவும் நிதியமைச்சர் எச்சரித்துள்ளார். (அ)

# மரண அறிவித்தல்

தொ.பே : 065 2052 955



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 - 10 - 1937 | 19 - 02 - 2022 |

## திருமதி கந்தையா பாக்கியம் (உமையம்மை)

யாழ். சாவகச்சேரி சரசாலை மெய்கண்டான் வீதியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும், பிரான்ஸ் Nice ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பாக்கியம் அவர்கள் 19-02-2022 சனிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிவகுரு தெய்வானை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிவகுரு கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், வி. இராஜலஷ்மி(சுவிஸ்), க. சிவபாலன்(ஜேர்மனி), காலஞ்சென்ற கோபாலன், க.பிரபாகர்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், க.அருணாசலம்(கிராம்புவில்), காலஞ்சென்றவர்களான பே.காமாட்சி, ந.தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அ.புனிதவதி(கிராம்புவில்), காலஞ்சென்ற வர்களான ப.பேரம்பலம், ப.நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சு.விக்னராஜன் (உரிமையாளர், SVS Traders Burgdorf, சுவிஸ்), சி.வாசுகி(ஜேர்மனி), பி.ரேணுகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வி.பிருந்தன், பி.ஆரூண்ஜா, வி.பிரியந்தி, சி.பிரவீண், சி.பிரண்யா, பி.நிகிஸ் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு :
Wednesday, 23 Feb 2022 3:00 PM - 5:00 PM
Thursday, 24 Feb 2022 3:00 PM - 5:00 PM
Friday, 25 Feb 2022 3:00 PM - 5:00 PM
Saturday, 26 Feb 2022 3:00 PM - 5:00 PM
Sunday, 27 Feb 2022 3:00 PM - 5:00 PM
Monday, 28 Feb 2022 3:00 PM - 5:00 PM
Tuesday, 01 Mar 2022 3:00 PM - 5:00 PM
Accueil Funéraire Robaut 265 Bd de la Madeleine, 06200 Nice, France

கிரியை :
Wednesday, 02 Mar 2022 9:00 AM - 12:00 PM
Accueil Funéraire Robaut 265 Bd de la Madeleine, 06200 Nice, France

தகனம் :
Wednesday, 02 Mar 2022 2:00 PM
Crematorium Nice Côte d'Azur Chemin du Roguez, RD 6202, 06670 Colomars, France

அன்னாரின் துயர்பகிர்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சாவகச்சேரி சங்கத்தானையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 09:00 மணிமுதல் ந.ப 12:00 மணிவரை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**இராஜலஷ்மி விக்னராஜன் - மகள், மருமகன்**
**Mobile : +41798866769**

தகவல்:
**குடும்பத்தினர்**

# மின் வெட்டு காரணமாக சுகாதாரத்துறை முடங்கும்!

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

மின்வெட்டு ஐந்து மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாலும், எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு இல்லாமையாலும் சுகாதாரத் துறை விரைவில் முடங்கும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மற்றும் அவசரகால பதிலளிப்பு பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதாரத் துறை தற்போது வைத்தியசாலைகளில் இருக்கும் மின்பிறப்பாக்கிகளையே பெரிதும் நம்பியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு இதற்கு தடையாக இருக்கும்.

வைத்தியசாலைகளுக்கான மின்பிறப்பாக்கிகளை இலங்கை மின்சார சபையே பராமரித்து வருகிறது. தற்போது வரை அவற்றை இயக்குவதற்கு போதுமான அளவு டீசல் உள்ளது.

எனினும், வைத்தியசாலைகளில் உள்ள பக்கப் ஜெனரேட்டர்களுக்கு, குறிப்பாக பெரிய வைத்தியசாலைகளுக்கு எரிபொருள் பற்றாக்குறை இருக்கலாம் என்பது எங்களின் அச்சம்-என்றார்.

இதேவேளை, தற்போதைய மின்வெட்டு காரணமாக வைத்தியசாலைகளின் செயற்பாடுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையெனக் குறிப்பிட்டுள்ள இலங்கை மின்சார சபை, எவ்வாறாயினும், எதிர்காலத்தில் வைத்தியசாலைகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது தொடர்பில் உறுதியாகத் தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

மின்வெட்டுகளை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தின் தினசரி மதிப்பீட்டைப் பொறுத்தே இது தங்கியுள்ளது என்றும், எனினும் பொது மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகாமல் இருக்க இலங்கை மின்சார சபை தங்களால் இயன்றதைச் செய்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

# மார்ச் 3 இல் இலங்கை தொடர்பான அமர்வு!

*கொழும்பு, பெப். 26*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வு இம்மாதம் 28 ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் உரையாடல் அமர்வு நடைபெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அமர்வின்போது இலங்கை தொடர்பிலான புதுப்பிக்கப்பட்ட எழுத்து மூல சமர்ப்பணத்தை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 - 10 - 1949 | 23 - 02 - 2022 |

## திருமதி கமலாதேவி சந்திரபாலன்

யாழ். புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வதிவிடமாகவும், கனடா Toronto வை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி சந்திரபாலன் அவர்கள் 23.02.2022 புதன்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகளும்,சந்திரபாலன்(சங்கீத பூசணம்) அவர்களின் அன்பு மனைவியும், கமலச்சந்திரன்(சுவிஸ்), கலையழகன் (சுவிஸ்), சந்திரிகா(கனடா), தேனுகா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,ஜெயகௌரி(சுவிஸ்), ராகினி (சுவிஸ்), ரவீந்திரகுமார்(கனடா), காலஞ்சென்ற சுதாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பாலசிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சண்முகம், பரமேஸ்வரன்(சுவிஸ்), நாககேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பவதி(சுவிஸ்), விமலாதேவி(சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), சந்திரகுமார்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அட்சயன், கருணி, காருஷன், கார்ஸ்வினி, கார்ஸ்விகன், கஜீவன், யாசி, சுலக்ஷன், யோழன், சிஜானுகா, அபிஷா, அஜிஸ் ஆகியோரின் அன்புப் பேத்தியும், இதயராஜ், சங்கீதா, ரூபன், தீபன், நிஷாந்தன், மயூரன், ஜெனிவன் ஆகியோரின் அன்பு அத்தையும், சுஜீவன் அவர்களின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 26 Feb 2022 2:00 PM - 5:00 PM
Sunday, 27 Feb 2022 7:00 AM - 8:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை :
Sunday, 27 Feb 2022 8:00 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம் :
Sunday, 27 Feb 2022 10:30 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**சந்திரிகா - மகள்**
**Mobile : +16474061847**

தகவல்:
**குடும்பத்தினர்**






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்

6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்

6.55 மணி : இன்றைய பலன்

7.05 மணி : உளவியல் கருத்து

7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி

7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : TIK TOK

11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

1.00 மணி : மழலைகள் நேரம்

1.30 மணி : WEEK END MOVIE- பிரியமான தோழி

4.30 மணி : மனிதனின் மறுபக்கம்-ஜெ.ஜெயலலிதா



5.00 மணி : அந்தி மந்தாரை

6.00 மணி : எதுசரி எதுபிழை

**இரவு**

7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி

8.00 மணி : இரவுச் செய்திகள்

9.00 மணி: டான் பட்டிமன்றம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

7.00 மணி : இன்றைய சிந்தனை

7.05 மணி : இன்றைய நாள்

7.20 மணி : ஈழத்து சித்தர்கள்

7.30 மணி : மங்கள இசை

8.00 மணி : அருளுரை

8.30 மணி : திருவாசகம்

9.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பஜனை

10.30 மணி : தமிழகோவில் திருவிழா

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்

7.30 மணி : அருளுரை

8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

8.00 மணி : ஜெபமாலை

9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)

10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)

04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

06.00 மணி : இயேசுவின் போதனைகள்

07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஜ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு